# "தமிழ் ஈழத்தின் விடுதலைக்கு கைகொடுத்து உதவுங்கள்!"


# சுதந்திரன்
SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 தை 11 முஹர்ரம் 22, (25 1-76) ஞாயிறு புத்தகம் 29, இதழ் 29


## இந்தியபிரதமர் இந்திராவிடம் உலகத் தமிழர் பாதுகாப்பு பேரவை கோரிக்கை!

"கொடுங்கோலாட்சியில் சிக்கித் தவித்த பங்களா தேஷ் மக்களுக்கு உரிய நேரத்தில் கைகொடுத்துதவி, அவர்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தது போலவே—சிங்களக் கொடுங்கோலாட்சியில் சிக்கிச் சீரழியும் ஈழத் தமிழர்களுக்கும் கைகொடுத்து அவர்களது தாயகமாகிய தமிழ் ஈழ நாட்டை மீண்டும் ஒரு சுதந்திர நாடாக்கி, அதை அவர்களிடமே ஒப்படைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்!"

—இவ்வாறு பொங்கல் தினத்தன்று (15—1—76) சென்னை கிண்டியிலுள்ள கவர்னர் மாளிகையில் வைத்து உலகத் தமிழர் பாதுகாப்பு பேரவையின் சார்பில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்ட மகஜர் ஒன்றில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுளது.

உலகத் தமிழர் பாதுகாப்பு பேரவையின் 200 உறுப்பினர்களுடன் சென்ற பேரவையின் சார்பில் திரு. தமிழ் மன்னன் இந்த மனுவை இந்தியப் பிரதமரிடம் கையளித்தார். அதற்கு முன்னர் இந்தியப் பிரதமருக்கு திரு. தமிழ் மன்னன் மலர் மாலையொன்றையும்

5-ம் பக்கத் பார்க்க

# ஈழத்தமிழர்களுக்கெதிராக லண்டனில் ஈனத்தனமான பிரச்சாரம்!

ஈழத்தமிழர்களுக்கெதிராகவும் தமிழ் ஈழக்கோரிக்கைக்கு எதிராகவும், இலண்டனில்ஈனத்தனமான பிரசாரமொன்றை இனவெறி பிடித்த சிங்களவர்கள் சிலர் ஆரம்பித்துள்ளனர். இலங்கையின் வரலாற்றையே திசைதிருப்பி வெளிநாட்டவர்களுக்கு முழுப்பொய்யானதும் தவறுனதுமான தகவல்களை முன்வைக்கும் சிங்கள வெறியர்களின் இந்த முயற்சியை முறியடிப்பதில இலண்டனிலுள்ள தமிழ் ஈழவிடுதலை இயக்கங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இலங்கையிலுள்ள பெரும்பான்மையோா ஆரிய சிங்களவர்கள் என்றும், இலங்கையிலுள்ள தமிழர்கள் வந்தேறு குடிகள் என்றும் இந்த சிங்கள இனவெறியர்கள் பிரசாரம் நடத்துகின்றனர்.


சிறிமா—சாஸ்த்திரிஒப்பந்தத்தின்படி குடியேறிய தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டதென்றும், மீதியாக இருக்கும் தமிழர்கள் சிங்களத்தைப்படித்து, பௌத்தத்தை தழுவி சிங்கள பௌத்தர்களாக இனம் மாறுவதற்கு ஒப்புக் கொண்டுவிட்டார்கள் என்றும் இந்த இனவெறியர்கள் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரம் கூறுகிறது. இலங்கையில் வாழும் தமிழர்கள் சிங்களத்தைப் படித்து, பௌத்தத்தை தழுவி பௌத்த சிங்களவர்களாக மாறுவிட்டால் அவர்களுக்கு எதிர்காலமேயில்லையென்றும் இப்பிரசுரம் அச்சுறுத்துகிறது.

இந்தத் துண்டுப் பிரசுரம் முழுவதும் தற்போது புதன் சுதந்திரன் இதழில் வெளிவந்துகொண்டிருக்கும் வால்டர் சுவோஸ் அறிக்கை முடிவடைந்ததும், முழுவதும் அப்படியேவெளியிடப்படும். சிங்கள இனவெறியர் நிலையை இப்பிரசுரம் அம்பலப் படுத்தியிருக்கிறது.

### தமிழ் அரசியல் வாதியின் பிரசாரம்

இதே நேரத்தில் ஈழத் தமிழ் மக்களால் அங்கீகரிக்

—5-ம் பக்கம் பார்க்க




## தொங்கு பாலம்!

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து வெகுஜன இயக்கத்தை நடத்துவதற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக் கிளை முடிவு செய்திருப்பதாக யாழ்மாவட்ட கிளைச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம் கூறியிருக்கிறார்!


## தை இதழ்

- தெவிட்டாத செங்கரும்பாய்—
- தித்திக்கும் இலக்கியப் பெட்டகமாய்—
- முத்தனைய அம்சங்களுடன்—
- இப்போது எங்கும் விற்பனையாகிறது—

விலை ரூபா ஒன்று மட்டுமே

- ஈழத்தின் தலைசிறந்த இலக்கிய ஏடு சுடர் ஒன்றே!

சுடர்
CHUDAR


## உதயசூரியன் கொடி சால்வை தயார்!

பெப்ரவரி 4ம் நாள்—தமிழ் ஈழத் தீர்மான நாளன்று—ஏற்றுவதற்கு வேண்டிய உதயசூரியன் கொடிகள் யாவும் இப்போது தயாராகிவிட்டன. அத்துடன் உதயசூரியன் சால்வைகளும் விற்பனைக்கு வந்துள்ளன. யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் கூட்டணி தலைமைச்செயலகத்தில் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

18"x23" அளவு கொண்ட கொடி ஒன்று ரூபா இரண்டு சதம் ஐம்பதுக்கும், 26"x45" அளவுள்ள கொடி ரூபா பன்னிரண்டுக்கும், உதயசூரியன் சால்வையொன்று ரூபா பத்து வீதமும் விற்பனை செய்யப்படுகிறது.

இவற்றைத் தபால் மூலம் பெறவிரும்புவோர் அதற்குரிய பணத்தை, அனுப்புவதற்குரிய தபால் செலவுடன் சேர்த்துக் காசுக்கட்டளையாகவோ, காசோலையாகவோ, அஞ்சற்கட்டளையாகவோ—சி. கதிரவேற்பிள்ளை, 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

## சாதியொழிப்பு—கலப்பு—சமூக சீர்திருத்தத் திருமணம்

யாழ். மாநகர முன்னாள் உதவி மேயர் திரு. நா. த. செல்லத்துரையின் புதல்வன் செல்வன் இரத்தின சிங்கத்துக்கும் எமது மூத்த புதல்வி திரு நிறைசெல்வி எலிசபெத்துக்கும் 26-1-76 காலை ஆறு மணிக்கு மட்டுநகர் தாண்டவன் வெளி பரிசுத்த காணிக்கை மாதா தேவாலயத்தில் நடைபெறவிருக்கும் சாதியொழிப்பு—கலப்பு—சமூக சீர்திருத்தத் திருமணத்தில் கலந்துகொண்டு மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்பர்கள், நண்பர்கள் உறவினர்கள் அனைவரையும் வேண்டுகிறோம். தவறுதலாக திருமண அழைப்பிதழ் கிடைக்காமற் போனவர்கள் இதையே அழைப்பிதழாக ஏற்றுத் திருமணத்துக்கு வருகை தருமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்
வ. பாலசிங்கமும் பாரியாரும்
21/1, தாமரைக்கேணி வீதி
மட்டுநகர் (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

● சென்றவாரத் தொடர்

# பிலிப்பைன் பெற்றெடுத்த வேங்கை!

இன்று ஈழத் தமிழனை சிங்களவன் (அரசாங்கம்) எப்படி அழிக்கின்ருனே அப்படித்தான், அன்று — 'பிலிப்பைன்ஸ்'சிலும் 'ஸ்பெயின்' வெறியர்கள் பிலிப்பைன்ஸ் மக்களை அடிமைப்படுத்தி ஆண்டனர். இந்த ஏகாதிபத்தியத்தை ஒழிக்கப் பல புரட்சிகள் ஆரம்பமாயின. இங்குள்ள 4ம் மாடி நாய்களைப் போல் அங்கும் ஸ்பானிய ஏவல் நாய்கள் தயவு தாட்சணியமின்றி இந்த விடுதலை விருமபிகளை மிருகங்களை விடக் கேவலமாகச் சித்திரவதைப்படுத்தினர்.

1861ம் ஆண்டு ஒரு அறிஞனுக்கும், ஒரு புரட்சிக் கவிக்கும் பிள்ளையாய்ப் பிறந்த 'ரிசல்' இயற்கையிலேயே சுதந்திர வீரனுக வளர்ந்தான். தாய் எழுதிய விடுதலைப் பாடல்களே இவனுக்குத் தாலாட்டு. வீராகளின் வீர வரலாறுகளைத் தந்தை மூலம் தாரக மந்திரமாகவே கற்ருன். இதனுல் இள வயதிலேயே கொடுமை செய்யும் ஸ்பானிய ஆட்சியை ஒழித்துக்கட்டும் கட்டுக் கடங்கா வீரம் இவனுள் விளைந்தது.

இலங்கையில் குறிப்பாக மலையகத் தமிழன் எப்படி நாயாக — நடைப்பிணமாக நடத்தப்படுகின்ருனே, அப்படி அன்று பிலிப்பைன்ஸ் மக்கள் நடத்தப்படுவது கண்டு அவனது சுதந்திர வெறி எரியும் தீயில் எண்ணை ஊற்றியது போல் பற்றி எரிந்தது. இக்கால கட்டத்தில் தாயின் வீரப்பால் அருந்தியதால் 'புரட்சிக்கவி' இயற்றும் திறமையையும் பெற்ருன். இக்கால கட்டத்தில் தான் இவனது வீர உணர்வைக் கண்டு தட்டிக்கொடுத்த ஒரு பெரியவரை ஸ்பானிய வெறிகொண்ட அரசு "மணிலாவில் சுதந்திர உணர்வு கொண்ட குற்றத்திற்காகத் தூக்குக் கயிற்றில் ஊசலாட விட்ட கொடுமையையும் கண்டான். இந்தக் காட்சியைக் கண்ட பின் அவனுல் தூங்கவும் முடியவில்லை. அன்றுதான் நாடு முழுவதையும் சுதந்திரப் போருக்குத் தட்டி விடும் உணர்வைப் பெற்ருன். அப்பெரியவரது படுகொலை ஒரு உந்து சக்தியாக அமைந்துவிட்டது.

'பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்'— என்பதுபோல் அவன் தாய் தந்தையை எக்காரணமுமின்றி சிறையினுள் தள்ளினர். (இலங்கையில் இப்போது நடப்பதும் இதுவே) 'ரிசால்' துடித்தான். அப்போது அவன் கல்வியிலும் சிறந்து விளங்கினுன். 'பொறியியல்' கல்வியிலும் பரீஸ் நகரில் படித்துத் தேறியிருந்தான். அதன் காரணமாக "பிலிப்பைன்" என்னும் சர்வதேசப் புகழ்பெற்ற நூலை எழுதினுன். இந்த நூல் எங்கள் அமரர் இராசரெத்தினம் எழுதிய இலங்கைத் தமிழர் பற்றிய இன்றைய நிலையைச் சித்தரிப்பது போல் அன்றைய பிலிப்பையினின் வாழ்வைச் சித்தரித்தது. "மீண்டும் இலங்கை எரிகின்றது" — என்ற நூலை எப்படி சிங்களப் பாசிச ஆட்சி தடை செய்ததோ அப்படி ரிசலின் நூலும் பிலிப்பைன்சில் தடை செய்யப்பட்டது.

அந்தப் புத்தகம் தப்பித் தவறி யார் கையில் இருப்பினும் அவர்களும் தண்டிக்கப்பட்டனர். இந்தக்கொடுமைகளைக் கண்டு 'ரிசல்' பயப்படவில்லை நாடு முழுவதும் இரகசியமாக விநியோகித்தான். நாடு முழுவதும் இந்நூல் புதிய எழுச்சியைத் தோற்றுவித்தது தாய் நாட்டின் அடிமை நிலையை அனேகர் புரிந்து கொண்டனர். தூக்கத்திலிருந்து பிலிப்பைன்ஸ் விழித்தது. எங்கும் விடுதலை வெறி.

விளைவு...

விடுதலை விரும்பிகள் ஒரு கழகம் அமைத்தனர். தலைமைப் பொறுப்புத் தானுகவே 'ரிசல்'காலடியில் வீழ்ந்தது. சுத்த விடுதலை வீரனல்லவா அவன்.

"நான் சுதந்திரத் தொண்டனேயன்றி எனக்குத் தலைமை வேண்டாம்" — எனக்கூறித் தன் மன உறுதியையும் உண்மை நோக்கையும் வெளிபபடுத்தினுன்.

1892இல் புரட்சித் தொண்டர்களைத் திரட்டி இரகசிய சங்கமொன்றை நிறுவினுன். எங்கும்விடுதலைஉணர்வு தலைதூக்குகின்றதோ அங்கெல்லாம் அதை நசுக்கும் பாசிச ஆட்சி 'ரிசலை' நாடு கடத்தியது. இங்கிலாந்து சென்று அங்கெல்லாம் தன் தாய் நாட்டின் கொடுமை நிலையினை விளக்கினுன். இறுதியில் 'கொங்கொங்' வந்து உழைத்து பணம்சேர்த்து அனைத்தையும் தன் தாய் நாட்டின் அவல நிலையைப் படம் பிடித் காட்டுவதிலே செலவு செய்தான்.

**வண்ணை ஆனந்தன்**

இவன் அன்னிய நாடுகளில் இருப்பதும் ஆபத்து என உணர்ந்த ஆட்சி அவனது உறவினர்கள், நண்பர்கள் அனைவரையுமே பிடித்துச் சிறையில் தள்ளியது (இங்கும்கூட யாரையோ பிடிப்பதற்காகக் காரணமின்றி தாய், தந்தை, மனைவியென ஒன்றுமறியா அப்பாவிகளைச் சிறையில் தள்ள முயலும் நிலைதான்.)

"ஏ... ஆணவம் கொண்ட ஈன ஆட்சியே, எனக்காக ஏன் அப்பாவிகளையெல்லாம் கொடுமைப்படுத்துகிறீர்கள் நானே வருகிறேன்' என அறிவித்து மணிலா வந்தான் உத்தம விடுதலை வீரன் 'ரிசல்', முடிவு அவன் 'டாபிடன்' — என்ற ஊரை விட்டு எங்கும் போகக்கூடாது என ஊர்க்காவலில் போட்டது அரசு.

'விடுதலை விரும்பி'யால் சும்மா இருக்க முடியுமா, என்ன? அங்கும் பாடசாலை நிறுவிப் புரட்சி விதை தூவினுன். இக்கட்டத்தில்தான் 'ஐரிஷ்' பெண் ஒருத்தியைக் காதலித்து மணம் புரிந்தான். வள்ளுவனுக்கு வாசுகிபோல் அவன் பணிக்கு அவள் உறுதுணையானுள். திடீரென ஒரு நாள் புரட்சி எரிமலையாய் வெடித்தது கண்ணில் காணும் மனிதர்கள் எல்லாம் நாய்கள் போல் சுட்டுக்கொள்ளப்பட்டனர். கொடுமைக்கு ஸ்பானிய ஆட்சி சிறிலங்கா ஆட்சிக்குச் சளைக்கவில்லை 'ரிசல்' கைது செய்யப்பட்டான்.

புரட்சியைத் தூண்டினுன்.

இரகசியச் சங்கம் நடத்தினுன்...

இப்படிப் பல குற்றச் சாட்டுகள் அவன் மேல் சுமத்தப்பட்டன. 'சுட்டுக் கொல்லப்படவேண்டும்'— இதுதான் நீதிமன்றம் அவனுக்களித்த தீர்ப்பு இத் தீர்ப்பின் படிதான் வீர கர்ஜனை புரிந்து மடிந்தான் 'ரிசல்' அன்றே மூண்டது விடுதலை வெறி! இல்லை, எரிமலையே வெடித்தது!!

"எங்கே ரிசல்...! என் கணவன் எங்கே...!! எங்கே உங்கள் தலைவன்...? பொங்கி எழுங்கள்..." — என் ஆணை பிறப்பித்தாள் அவன் மனைவி.

"எம் வீரனை, எம் தலைவனை நாயைப்போல் சுட்டுக் கொன்றதுடன், எப்படி இந்த ஈனர்களே அடக்கம் செய்யலாம்." — கொதித்தெழுந்தனர் மக்கள்.

ஒரு சமுதாயமே போராடத் தயாரானுல் துப்பாக்கி என்ன செய்ய முடியும்.

வீழ்ந்தது ஸ்பானிய கொடுங்கோல் அரசு. தூக்கு மேடை தூள் தூள் ஆக்கப்பட்டது. மாவீரன் ரிசலின் சவப்பெட்டி புதை குழியிலிருந்து எடுக்கப்பட்டது.

எங்கு அவன் சுட்டுக் கொல்லப்பட்டானே அங்கே அவன் அடக்கம் செய்யப்பட்டான்!

முதல் சுதந்திரக் கொடியும் அங்குதான் ஏற்றப்பட்டது!!

தமிழ் சுதந்திரக் கொடியும் உலகத் தமிழாராச்சி மகாநாட்டுத் திடலில் ஒரு நாள் பறக்கும் இது உறுதி.

## செயல் வீரா! எங்குற்ருய்?

கற்குடாத்தொகுதித் தமிழ்க் காவலன் பொன்வாசகர் நீ
பொற்குடம் போல் திகழ்ந்து புதுமை பல புரிந்தாய்,
அற்ப சலுகை வேண்டி அரசியல் நடத்தா வேந்தன்,
நற்றமிழ் உயர்வுக்காக நாளெல்லாம் நீ உழைத்தாய்.

அற்பன் முதலமைச்சன் ஆர். டி. பண்டாரன் அன்று...,
விற்பனர் போற்றும் எங்கள் 'வேல் முருகன்' ஈந்தமொழி
கொற்றமதில் வீற்றிருத்தல் கூடாது கூடாதென்று,
பொற்றமிழைப் பழித்துரைத்தான் போற்றினுன்
சிங்களத்தை

அத்தோடு நின்றிடாது,ஆணவத்தோடு சட்டம்ஆக்கினுன்
ஆண்டு ஐம்பத்தி ஆறு, ஆனிமாசம், ஐந்தாம் திகதி
பாண்டு வாத்தியம ஒலிகக பௌத்த பிக்கு "பிரித்"ஓத,
நீண்ட சொற்போர்க்கிடையே நிறைவுற்றது
சிங்களச் சட்டம்!

அத்தினத்தில் "தமிழரசார்" அகிம்சை வழி நின்ருர்
சத்திய சீலன் தந்தை தலைமையைச் சிரமேற்கொண்டார்
உத்தமன் மாணிக்கமும் ஓராயிரம் தொண்டரோடு
சத்தியாக்கிரகம் செய்தார் சட்டசபை முன்னுலே

சிங்களக் காடையர்கள் சீறினர் வேங்கை போன்று
வெங்கலக் கடையுள் புகுந்த வேழம் போல்
ஆர்ப்பரித்தார்
அங்கமெல்லாம் குருதிகொட்ட அடிதாங்கிப் பல்
இழந்தார்
எங்கள் செயல் வீரன் இனிய பொன். வாசகரும்

சிங்களவர் கொடுமையினை நேரில் கண்டார் நெஞ்சம்
நொந்தார்
செந்தமிழர்க் கொரு நாடு தேவையென்ருர்
கொழும்பிலிருந்து—
வந்தவுடன் முதல் கட்டம் "வடமுனைக்குடியேற்றம்"
இன்னும் பல
சிந்தனையில் கொண்டார் செயல்பட்டார் வெற்றி
கண்டார்

திருமலைக்கு யாத்திரை, செந்தமிழர் கருத்தரங்கு, "ஸ்ரீ"
போராட்டம்
சிறைவாசம் இன்னும் பல சிரமேற்கொண்டு செயல்
பட்ட உன் உடலோ இன்று
பிறைதேய்ந்து செவ்வானில் மறைந்தது போல்
செந்தணலில்,
உறைந்து ஒரு பிடிசாம்பலாகியதே கைக் கலச மதில்!

—மு. திருத்தணிகாசலம்
செங்கலடி

### வர்த்தக ஒலிபரப்புக் கட்டுப்பாட்டாளராக

# விவியனுக்கு உயர் பதவி

இலங்கை வானெலியின் தமிழ் ஒலிபரப்பில் கடந்த கால் நூற்ருண்டுக்கு மேலாகப்பணி புரிந்து இலங்கையில் மட்டுமன்றி தமிழ் பேசும் தரணியெங்கும் வாழும் தமிழர்களுக்கு தனிச்சேவை புரிந்து தனக்கென ஓர் ஒப்பற்ற இடத்தை தமிழ் நேயர்களின் இதயங்களிலே பெற்றுக் கொண்ட திரு. விவியன் நமசிவாயத்துக்கு 12-1-76முதல் இலங்கை வானெலி வர்த்தக ஒலிபரப்பின் கட்டுப்பாட்டாளராக பதவி உயர்வு நியமனத்தின் மூலம் கிடைத்துள்ளது.

திரு. நமசிவாயம், 1951ம் ஆண்டு விவரணச் சித்திர எழுத்தாளராக முதன்முதலாக நியமனம் பெற்றவர். அன்று முதல் பல விவரணச் சித்திரங்களையும், நேர்முக வர்ணனைகளையும், விவேகச் சக்கரம் போட்டிகளையும் ஒலிபரப்பி, தனது திறமையால் அசைக்கமுடியாத அத்திபாரத்தை அமைத்துக் கொண்டார். 1956ம் ஆண்டு கிராம நிகழ்ச்சி உதவியாளராக நியமனம் பெற்று, 12 வருடகாலமாக கிராமிய மக்களுக்காக விவசாய நிகழ்ச்சிகள்; கிராமியப் பாடல்கள், நாட்டுக் கூத்துக்கள், விவசாய அறிவுப் போட்டிகள், என்று பல நிகழ்ச்சிகளை நாள்தோறும் ஒலிபரப்பி வந்தார்.

1968ல் வர்த்தக சேவையின் உதவி முகாமையாளராக நியமனம் பெற்று அங்கும் பல அபிவிருத்திகளைச் செய்தார். உள்ளூர் சேவையுடன், ஆசிய வர்த்தக சேவையும் இவரது தளராத முயற்சியால் படிப்படியாக அதிகரித்தது.

இலைமறை காயாக இருந்த எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் ஊக்குவிப்பதற்காக பல புதிய நிகழ்ச்சிகளை வர்த்தக ஒலிபரப்பில் அறிமுகப்படுத்தி வெற்றிபெற்றவர். அத்தகைய நிகழ்ச்சிகளில் அரங்கேற்றம், பொப் இசைப்பாடல்கள், பூவும் பொட்டும் போன்றவை முதலிடம் வகிக்கின்றன.

விவியன் நமசிவாயத்துக்கு புதிய நியமனத்தை அளித்ததன் மூலம் பல வருடங்களுக்கு முன் செய்திருக்கவேண்டிய ஒரு கடமையை பொன்விழாவைப் பூர்த்திசெய்தபின் இலங்கை வானெலி நிறைவேற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சொன்னுர்கள்...!

"கள்வெறி, காமவெறி ஆகியவற்றைப் பொறுத்தவரை சாதிவெறி தலை தூக்குவதேயில்லை. கல்யாணத்தில் மட்டும் உயர்ந்தசாதி, தாழ்ந்தசாதியென்று பாகுபாடு காட்டப்படுகிறது. இத்தீண்டாமைக்கொடுமையால் தான் தமிழினம் பிரிந்து கிடக்கிறது. சாதி வேறுபாடு ஒழிக்கப்பட்டுவிட்டால் இன விடுதலைப் போரில் பாதி வெற்றி கிட்டிவிடும்!

—யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் நடைபெற்ற [illegible]

"தமிழாராய்ச்சிமாநாட்டின்போது உயிரிழந்த அப்பாவித் தமிழர்களுக்காக எதுவித விசாரணையையும் நடத்த மறுக்கும் அரசாங்கம், மறுசீரா போன்ற கொலைகாரர்கள் தூக்கு மேடைக்குப் போகுமுன இறந்த நிலைமை குறித்து கமிஷன் நியமித்து விசாரணை நடத்தியுள்ளது இதிலிருந்து தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளை இந்த அரசு எவ்வளது தூரம் புறக்கணித்து வருகிறது என்பது புலனுகிறது"

—கரவெட்டி சிந்தாமணி [illegible] சமூக நீதிய கருத்தரங்கில் உடுப்பிட்டி சிவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் தந்த வேதனை

அன்பு நண்பா,

நம் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை சீனப்பிரதமர் சூ என்லாயின் மரணத்தையொட்டிய துக்க நாளாக சிங்கள ஏகாதிபத்தியம் பிரகடனப்படுத்திவிட்டதே; வானொலியைத் திருப்பினால் அது சோககீதம் இசைத்து 'செத்த வீடு' கொண்டாடுகிறதே; மங்கல நாளாக விளங்கிட வேண்டிய நாளை மமதையாளர்கள் அமங்கல நாளாக்கி விட்டார்களே; என்று' நாமெல்லாம் உள்ளூர வருத்தப்பட்டாலும், இந்த ஆண்டுப் பொங்கல் நாள் எப்படியோ நமக்கெல்லாம் துக்க நாளாக இயற்கையாகவே அமைந்து விட்டது!

'தடைகள் பல எதிர்ப்படினும் தடந்தோளுண்டு' என்ற புரட்சிக் கவிஞரின் வார்த்தைப்படி — தடைகளையெல்லாம் துச்சமென மதித்து—1974 சனவரி பத்தில் உலகத் தமிழ் மாநாட்டின் இறுதிநாளில் உயிர்த் தியாகம் புரிந்த தியாகத் தீபங்களின் நினைவாக நம் தமிழ் இளைஞர் யாழ் வீரசிங்க மண்டபத்தின் எதிரில் கட்டியெழுப்பிய நினைவுத் தூணை— நெஞ்சமிலாத வஞ்சகக்கூட்டத்தார் நிறு தூளி செய்திட்டார் நேர்மையற்ற முறையினிலே— இருட்டினிலே வந்து இடித்துத்தள்ளி விட்டார் குருட்டுமனம் படைத்தோர் — கோலேந்திகளின் குற்றேவல் செய்திடுவோர் — காக்கிச் சட்டையணிந்திட்ட கயவர் கூட்டத்தினர்— என்கிற செய்தியை ஏட்டினிலே கண்டதுமே இதயம் குமுறிற்று! ஆவேசமும் துயரமும் ஒருங்கே எழுந்திட்டது தை முதல் நாளில்!

தமிழ் கேட்கவந்து—தமிழ் அறிஞர்களைப் பார்க்க வந்து — தறுதலைகளின் தாக்குதலின் விளைவாக தமிழுக்கு உயிர் தந்து நம் நெஞ்சில் நிலையாகிவிட்ட நற்றமிழ்த் தியாகிகளுக்கு— நம் இரத்தத்தின் இரத்தங்களுக்கு — ஓர் நினைவுச் சின்னத்தையாவது நிரந்தரமாக நிறுவி மகிழ்ந்திட—அந்த மகிழ்ச்சியில் திளைத்திட-அரக்கர் ஆட்சி அனுமதிக்கின்றதில்லையே அந்தத் தியாகிகளுக்கு நமமினம் ஒருசிறு கைம்மாறு கூட காட்டிட முடியாதவாறு கையறு நிலையில் தவிக்கவேண்டியிருக்கிறதே என்பதை எண்ணுகிறபோது வேதனைக்கண்ணீர் வெடித்துச் சிதறுகிறது!

தமிழுக்கு உரிமை தராதேயென்று வெறிபிடித்து ஊளையிட்ட தமிழ்ப்பகைவன் ஒருவனுக்கு—தமிழனை தோசை, வடை நல்லெண்ணெய், கள்ளத்தோணியென்று வாயில் வந்தபடி இகழ்ந்து தூற்றிய இரத்தினசாரா எனும் அந்தச் சிங்கள வெறியனுக்கு சிங்கள அரசாங்கமும், அதன் தலைவர்களும்—பொதுவுடமை பேசும் பீட்டர் கெனமன், சமதர்மம் பேசும் டாக்டர் என். எம. பெரேரா, ஆகியோர் உட்பட—தமிழனும் சேர்ந்து செலுத்தும் மக்களின் வரிப்பணத்தைக்கொண்டு கொழும்பில் நினைவுச்சின்னம் எழுப்பி மலரும் வெளியிட்டதை யாரும் அதற்குள் மறந்திருக்கமாட்டார்கள அந்த நினைவுச்சின்னம் அரசாங்க மரியாதையுடன் இன்றைக்கும் கொள்ளுப்பிட்டி சந்தியிலே காட்சி தருகிறது!

சிங்கள வெறியனுக்கு—தமிழை ஒழித்துக் கட்டப் புறப்பட்ட தமிழ்ப் பகைவனுக்கு இவ்வாறு சிலை வைத்தவர்கள்தாம் — யார் மீதும் துவேஷமின்றி, எந்த மொழியையும் எதிர்க்காமல் தனது மொழியின் இலக்கியச் சுவையை மாந்திட வந்து — பொலிசாரின் அனுவசியமான அட்டூழியத்தாக்குதலினால் உயிர்நீத்த ஒன்பது அப்பாவித் தமிழர்களின் நினைவுச்சின்னத்தை யாழ்ப்பாணத்தில் நிலைக்க விடுவதில்லையென்று உறுதிபூண்டு ஈனத்தனமான வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்!

சிங்கள இனவெறி—ஆதிக்கவெறி—ஆட்சியாளர்களதும் அவர்களது எடுபிடிகளான ஆயுதப்படை வீரர்களினதும் மனச்சாட்சியை — மனிதத்தன்மையைக்கூட அவ்வளவு தூரம் மரத்துப்போகச் செய்துவிட்டது!

ஒரு இனத்தை, மொழியையே அழிக்கப் புறப்பட்டவனுக்கு கொழும்பில் சிலை வைக்கலாமென்றால்—எந்தமொழிக்கும் எந்த இனத்துக்கும் பகையின்றி தன் சொந்தமொழியின் பெருமை பேசும் மாநாட்டிலே கலந்துகொண்ட குற்றத்துக்காக — அநியாயமான முறையில் படுகொலைக்காளானவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நினைவுச்சின்னம் வைக்கக் கூடாதா?

நண்பா, தமிழ்த்தியாகிகளின் நினைவுச் சின்னம் உடைக்கப்படுவதற்குக் காரணம் —நாம் நமது நாட்டில் உரிமையற்றவர்களாக —அடிமைகளாக இருப்பதுதான்! சிங்கள சிறீலங்கா ஏகாதிபத்தியத்திலிருந்து நம் தமிழ் ஈழத்திருநாடு விடுபடுமட்டும்— நம்மை நாமே ஆளும் நிலை தோன்றுமட்டும் — இங்கு நாம சுதந்திரமுள்ள மனிதர்களாக வாழவே முடியாது! அடிமைக்கு ஏது உரிமை? நினைவுச் சின்னம் மீண்டும் மீண்டும் உடைக்கப்படுகின்றதில — நமது கைகளில் பூட்டப்பட்டிருக்கும் அடிமை விலங்கை நாம் இன்னும் உடைக்கவில்லை என்ற உண்மையைத்தான் எடுத்துக் காட்டி நிற்கிறது!

நினைவுச்சின்னத்தை அதிகார வர்க்கம் உடைத்தெறிவதற்கு நாம் தரவேண்டிய பதிலடி—நம் கைகளில் இடப்பட்டிருக்கும் அடிமை விலங்கை அடித்து நொறுக்குவதுதான்! தமிழ் ஈழத்தையும், சிங்கள சிறீலங்காவையும் பிணைத்திருக்கும் தொடர்பை முறித்தெறிவதுதான்! இதை செய்து முடித்துவிட்டால் — நம்நாடு நமதாகிவிடும்; நம்மவர்க்கு நாம் வைக்கும் சிலையை அடித்து நொறுக்க எவனும் அப்போது துணியமாட்டான்; அப்படித் துணிபவனின் தலை தூள் தூளாகும்!

எனவே தமிழ் ஈழத்தை தனிநாடாக்கும் நமது விடுதலைப்போராட்டத்தை வேகப்படுத்துவதும் விரைவுபடுத்துவதுமே நம்மை

## அரசியல்நடை

எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளுக்கும் நாம் தரும் ஒரேயொரு பதிலாக இருக்க வேண்டும்; இருக்கமுடியும்!

தை முதல் நாளில் இத்தகைய சிந்தனைகளுடன் நான் இருந்திட்டவேளையில்தான்— இதயத்தையே கலங்க வைத்திட்ட அந்த வேதனைச் செய்தி எனக்குக்கிடைத்தது! ஆம், நம் பெருமதிப்புக்குரிய மாணிக்கவாசகரின் மறைவுச் செய்திதான் அது! செய்தி கேட்டதும் என் திண்ணிய மனம்கூட கலங்கியழுதது!

இருபத்தைந்து ஆண்டு காலம் நம்விடுதலை இயக்கத்தின்முன்னணித்தளகர்த்தர்களில்ஒருவராக செயற்பட்டவர்; இயக்கத்தின் மீதும் இலட்சியத்தின் மீதும், எம தலைவர் செல்வா மீதும் அழியாத—யாராலும் அழிக்க முடியாத விசுவாசம் கொண்டிருந்தவர்; கிழக்கு மாகாணத்தின் ஒப்பற்ற செயல் வீரர்; சிங்களக் குடியேற்றங்களால் செந்தமிழர் பூமி பறிபோகாமல் பாதுகாத்து நின்றவர்; மாசுமறுவற்ற மனமுடையார்; கறைபடியாக் கரமுடையார்; கல்குடாத்தொகுதியின் கண்ணியமிக்க தலைவர்; காலிமுக சத்தியாக்கிரகத்திலும், கச்சேரி மறியற்போராட்டங்களிலும் கலந்துகொண்டு அடியும் உதையும் பட்டு பல்லுடைந்து நின்றபோதிலும்—பாழுஞ்சிறைக்குள் தள்ளப்பட்டபோதிலும்—பைந்தமிழ் காக்கும் களத்தை விட்டு ஓடி ஒழிக்காதவர்; தன் வீட்டை நோக்கி 1958ம ஆண்டு சிங்களவன் ஒருவன் கைக்குண்டு வீசிய நேரத்திலும் — கலங்கிடாமல் கட்சியின் இலட்சியங்களைக் காத்து நின்றவர்; கட்சியால் தனக்கென்ன இலாபம் என்று கணக்குப் பாராது — தன்னால் கட்சிக்கு இலாபம் என்னவென்று கணக்குப்பார்த்து வாழ்ந்தவர்; பதவியைப்பற்றி சிந்தியாது இயக்கத்துக்காக தூய்மையுடன் உழைத்தவர்; உத்தமர்; சத்திய சீலர்; நேர்மையாளர்; நெறி தவறாத மாணிக்கம்; அத்தகைய மாணிக்கத்தை— மாணிக்கவாசகரையா இழந்து விட்டோம்?

1975ம் ஆண்டு இறுதியில் — டிசெம்பர் 21ம் நாள் அவருடைய செங்கலடி இல்லத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணி தொகுதிக்கிளை அமைப்புக்கூட்டத்திற்கு நானும், நம் தலைவர் நாவலரும், திருமதி மங்கையர்க்கரசியாரும் நண்பர் ஈழவேந்தனும் சென்றிருந்தபோது எத்துணை இலட்சியப்பிடிப்புடன், எத்துணை வாஞ்சையுடன் அவர் நம்மை வரவேற்று, இயக்க விஷயங்களில் ஆர்வமுடன் எத்துணை ஈடுபாடு காட்டினார்! நாம் அவரை உயிருடன் இறுதியாகப் அன்றுதான் பார்க்கிறோம் என்பது அப்போது நமக்குத் தெரியாமல் போய் விட்டதே!

**அன்று அவரது இல்லத்தில் எமக்கு அவர் மதியவிருந்து போட்ட போது—அதுதான் அவர் உயிருடன் இருந்து நமக்குப்போடும் கடைசி விருந்து—உரிமைச்சோறு —என்பது அப்போது நமக்குத்தெரியாமல் போய்விட்டதே!**

கிழக்கு மாகாணம் [illegible] இயக்கத்துக்குத் தந்த ஒப்பற்ற மூன்று மாணிக்கங்களில் இரண்டு பெரிய மாணிக்கங்களை — இராசமாணிக்கத்தையும் மாணிக்கவாசகத்தையும்— அடுத்தடுத்து நம்மிடமிருந்து பறித்துவிட்டு இறைவன் ஏன்தான் இப்படி நமமை அழவைக்கிறானோ தெரியவில்லை! கல்லெல்லாம் எப்படி மாணிக்கக்கல் ஆக முடியாதோ—அதே போல் — எல்லோரும இராச மாணிக்கங்களாகவோ மாணிக்கவாசகங்களாகவோ ஆகிவிடமுடியாது!

அரசியல் நெருக்கடிகள், குடும்பத்தொல்லைகள், உடல் நலக்குறைவு, புகழ், இகழ், வெற்றி, தோல்வி, இன்பம், துன்பம எதுவரினும் சற்றும் மனம் கோணாது — ஏற்றுக்கொண்ட இலட்சியத்திலிருந்து இம்மியும் வழுவாது — இயக்கத்துக்கு கடுகளவுகூட துரோகம் நினையாது—சிந்தனை சொல், செயல் மூன்றிலும் தூய்மையாளராக விளங்கிய கல்குடா வீரர் மாணிக்கவாசகரின் பிரிவு தமிழர் கூட்டணிக்கும், கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கும் ஈடுசொல்ல முடியாத பாரிய நட்டமாகும்!

ஒரு விடுதலை இயக்கத்திலீடுபட்டிருப்பவர்களுக்கு கண்ணீரும் துன்பமும் வறுமையுமே இறைவன் தரும் சோதனைகளாகும்! எனவே வழிந்தோடும் கண்ணீரைத்துடைத்துக்கொண்டு செயல வீரர் அமரர் மாணிக்கவாசகர் பின்பற்றிக்காட்டிச்சென்றுள்ளபடி—

இலட்சிய வீரம்
இயக்கத்துக்கு விசுவாசம்,
தலைமைக்குக் கட்டுப்படுதல்,
தூய்மை,
நேர்மை,
அந்தரங்க சுத்தி

ஆகிய பண்புகளை இயக்கத்தவர்கள் மத்தியில் வளர்த்திடுவோம்! இனவிடுதலைக்கு அயராது பாடுபடுவோம்! அமரர் மாணிக்கவாசகரின் பணியைத்தொடர்ந்திட உறுதி பூணுவோம்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

## கூற்றுவனே உனக்கென்ன துணிவு?

காற்றும் ஓய்ந்தது கடலும் ஓய்ந்தது
கங்குல் எங்கும மூடியது
சீற்றம் கொண்டு காலன் மீது
செந்தமிழ் நெஞ்சம திட்டியது
ஆற்றல் கொண்ட தலைவனைக் கிழக்கின்
ஆதவன் ஆனவனை
கூற்றுவனே! உனக் கென்ன துணிவு?
கொண்டு போவதற்கு!

உரிமைகள் அற்று உடமைகள் அற்று
உறைவிடம் தான் அற்று
திரியும் தமிழச் சாதி தன்னை
தேக்கிச் சேர்த்தவனை
வரியுடை புலியின் குணமுடைத்தலைவன்
வாழத் தமிழனை
உரிமைகள் பெறவே உடலது பெற்ற
உயர் உளம் உடையவனை

சேரிகள் தொட்டு ஏரிகள் வரையும்
திருத்தி அமைத்தவனை
சீரியன் எங்கள் கூரிய சிந்தனை
செம்மல் "வாசகனை"
வாரிச் சொரியும் ஏழைகள் கண்ணீர்
வருடித் துடைப்பவனை
தேரினை ஈந்த பாரியின் மரபை
தெரியச் செய்தவனை

என்ன கருதி உயிரைப் பறித்தாய்
இரக்கம் அற்றவனே
தென்னவன் எங்கள் சிங்கத் தமிழன்
திராவிடர் பாசறையை
மன்னவன் மாணிக்க வாசகம் தன்னை
மறலி நீ கொண்டு
என்ன செய்யப் போகிறாய் பாவி
இதுவோ உன் நீதி?

—சோமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

## துன்பம்!

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கையும் விஞ்சுகின்ற முறையில் தமிழ் பேசும் மக்களின் விழிகளிலிருந்து கண்ணீர்ப்பெருக்கை ஏற்படுத்தி விட்டு—கடமை வீரர் கல்குடா மாணிக்கவாசகர் தைத் திருநாளன்று அமரராகிவிட்டார்!

தைமுதல் நாளன்று தமிழர்களது இல்லங்களில் பால் பொங்கவில்லை—கண்ணீர் தான் பொங்கியது!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, தியாகம், விசுவாசம், தூய்மை, வாய்மை, இலட்சியப்பற்று, ஒழுக்கம் போன்ற பண்புகள் நிறைந்த ஒப்பில்லாத அந்த மாணிக்கத்தை காலன் கையில் பறிகொடுத்து விட்டு தமிழ் சமுதாயம் இன்று கண்கலங்கி நிற்கிறது!

தமிழ் ஈழவிடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்துச்சென்ற தமிழரசுக்கட்சியின் மூன்று பெரிய கிழக்கு மாகாணத் தலைவர்களை அடுத்தடுத்து தமிழ் சமுதாயம் இழந்துவிட்டது.

அஞ்சாநெஞ்சன், அறப்போரணித் தலைவர் அரியநாயகத்தை இழந்தோம்; அடுத்து தமிழ் மக்களின் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றிருக்கும் தலைவர் இராசமாணிக்கத்தைப் பறிகொடுத்தோம்; இன்றோ மாசுமறுவற்ற மாணிக்கமாம், மாணிக்கவாசகரைப் பறிகொடுத்து விட்டு, கையறு நிலையில் கலங்கித்தேம்பித் தவித்து நிற்கிறோம்!

நேர்மையும் நிதானமும், எந்தக்கட்டத்திலும் யாருக்கும் வளைந்து கொடுக்காத கொள்கைவீரமும் துணிவும்நிறைந்த ஆண்மைத்தலைவர்களை கிழக்கு மாகாணம் ஒவ்வொருவராக இழந்துவருவது, தமிழ் ஈழத்துக்கு ஒரு பெரும் சோதனையாகி வருகிறது.

மறைந்த மாபெரும் தலைவர்களின் அடியொற்றி—தமிழர் விடுதலை இயக்கத்தை முன்னெடுத்துச்செல்வதற்கு கிழக்குத் தமிழகத்தில் உறுதியும், தியாகமும் இலட்சியத்தெளிவும், வைரநெஞ்சமும், கட்டுப்பாடும், கொண்ட இளந்தலைமையொன்று உருவாகவேண்டும்—அப்படிப்பட்டதொரு தலைமையை அங்கு உருவாக்க தமிழர் கூட்டணி தாமதமின்றி முன்வந்து வழிகாட்ட வேண்டும்!

மறைந்த தலைவருக்கு தமிழ் சமுதாயம் காட்டுகின்ற மரியாதை—அவர் விட்டுச்சென்ற பணியை—தமிழ் ஈழ சுதந்திர இயக்கத்தை தொடர்ந்து நடத்துவதுதான்! தமிழ் சமுதாயம் வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தன்னை அதற்குப் பக்குவப்படுத்திக்கொள்ளட்டும்!

## இன்பம்!

அமரர் மாணிக்கவாசகரின் திடீர் மறைவினால், தமிழ் மக்களுக்கு தாங்கொணாத் துன்பச்சேதியைத் தந்த மட்டக்களப்பு மாவட்டம்— மற்றோர் மகிழ்ச்சிச் செய்தியை — இன்பச்செய்தியையும் அடுத்துத் தந்திருக்கிறது.

நாளை மட்டுநகரில் நடைபெறும் சமூக சீர்திருத்த சாதியொழிப்புக்கலப்புத்திருமணத்தையே இங்கு குறிப்பிடுகிறோம்!

சாதிப்பிரிவும், சமயப்பிரிவும், நிலப்பிரிவுமே ஈழத் தமிழனை ஒன்று சேரவிடாமல் பிரித்துப் பிளவுபடுத்தி வருகிறது!

இந்த மூன்று தீமைக்கும் ஒரே சமயத்தில் தலையடி கொடுப்பதாக நாளை நடைபெறும் இத்திருமணம் அமைகிறது!

எதிர்ப்புக்களையெல்லாம் துச்சமென மதித்து—துணிகரமாக முன்வந்து —முப்பெரும் தீமைகளையும் ஒருசேர ஒழித்துக்கட்டி—தமிழ் சமுதாய ஒற்றுமைக்கு இது தான் ஒரே வழியென்பதை எடுத்துக்காட்டும் வகையில் இச் சமூக சீர்திருத்த திருமணத்தை முன்னின்று நடத்தும் மணமகன், மணமகள் குடும்பத்தினரை தமிழ் சமுதாயத்தின் சார்பில் நெஞ்சம் நிறைய வாழ்த்துகிறோம்!

இத்திருமணத்துக்கு இசைந்து இதை நடத்தும் இரு குடும்பத்தினரும் தமிழரசுக்கட்சியின் நீண்டகால உறுப்பினர்கள்; தமிழர் கூட்டணியின் தீவிர ஆதரவாளர்கள் எனவே இத்திருமணம் தமிழரசுக்கட்சியின் — தமிழர் கூட்டணியின் — ஒரு குடும்ப நிகழ்ச்சியென்று கூடச் சொல்லலாம்!

இத்திருமணம் — சாதியொழிப்புக்கும், சமய வேறுபாடு, நிலவேறுபாடு ஒழிப்புக்கும் ஒரு அத்திவாரமாக அமையட்டும்! இந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றி—தலைவர்கள் மட்டத்திலும், பொதுமக்கள் மட்டத்திலும், இன்னுமின்னும் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான சாதியொழிப்பு கலப்புத்திருமணங்கள் நடைபெறுவதற்கு இது வழிவகுக்கட்டும்! இதன்மூலம் தமிழ்பேசும் சமுதாயம், சாதி, மத, நிலவேறுபாடுகளற்ற ஒன்றுபட்ட சமத்துவ சமுதாயமாக மலர்ந்திடட்டும்!

இதற்கு அடியெடுத்துக்கொடுத்துள்ள மணமக்களையும் மணமக்களின் பெற்றோர்களையும் இதயம் குளிர வாழ்த்துகிறோம்!

# சிங்கள ஏகாதிபத்தியத்தில் செந்தமிழ் படும் சிறுமை!

## தேசிய பேரவையில் பண்டிதர் இரத்தினம்!

28-11-75 ஆம் தேதிய "டெய்லி மிரர்" பத்திரிகை ஒரு தலையங்கத்தை எழுதியிருக்கிறது. அந்தத் தலையங்கத்திலே, கொழும்பு விவேகானந்த சபை, இராமநாதனுடைய திருநாளைக்கொண்டாடியபொழுது அனுப்பிய அழைப்பிதழிலே சிங்களம் சேர்க்கப்படவில்லை; ஆங்கிலமும் தமிழும்தான் இருந்தன; இது இந்த நாட்டிலே ஓர் இனத்துவேஷத்தை உண்டாக்கும் செயல் என்று அப்பத்திரிகை எழுதியிருந்தது. ஆனல், இலங்கை அரச கூட்டுத்தாபனங்களிலே அரசாங்கத் திணைக்களங்கள் முதலியவற்றிலே தமிழ் ஒதுக்கப்பட்டதை — ஒதுக்கப்படுவதை அந்தப் பத்திரிகை பார்க்கவில்லையா என்று நான் கேட்கின்றேன். 'தமிழ் ஒதுக்கப்படுகிறது' என்று இதுவரையில் அந்தப் பத்திரிகை எழுதியிருக்கிறதா, அல்லது அந்த விடயம் அப்பத்திரிகைக்குத் தெரியாதா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

ஒரு சைவசமய நிலையம்—தமிழர்களாலே நடத்தப்படுகின்ற ஒரு நிலையம் அது தன்னுடைய அழைப்பிதழிலே சிங்களத்தைச்சேர்க்கவில்லை என்று சொல்லுகின்ற டெய்லி மிரருக்கு—அதுவும் அனுரா பண்டாரநாயக்காவின் முழுச்செல்வாக்கிலே நடாத்தப்படுகின்றதாகக் கருதப்படும் அப்பத்திரிகைக்கு, ஒவ்வொரு கூட்டுத்தாபனத்திலும், பெரும்பாலும் எல்லாத் திணைக்களங்களிலும் தமிழ் ஒதுக்கப்படுவது தெரியவில்லையா?

இங்கே என்னிடத்தில் தேசியப்புடவைக் கூட்டுத்தாபனம் பூகொடை ஆலையைத் திறப்பதற்காக எனக்கு அனுப்பிய அழைப்பிதழ் இருக்கின்றது. அந்த அழைப்பிதழிலே தமிழ் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது இந்த டெய்லிமிரரின் கண்ணுக்கு தெரியவில்லையா என்று நான் இங்கே கேட்க விரும்புகிறேன். அது ஒரு அரசாங்கக்கூட்டுத்தாபனம் அதுமட்டுமல்ல எங்களுக்கு அனுப்பப்பட்ட கார்லேபல் முழுவதும் தனிச் சிங்களத்திலேயே இருக்கிறது. அந்த கார் லேபலை இங்கே நான் உங்கள் கவனத்துக்காகச் சேர்க்கின்றேன். இதிலே என்ன எழுதப்பட்டிருக்கிறதென்று எங்களுக்குத் தெரியாது.

இந்த அரசாங்க கூட்டுத்தாபனங்களும் திணைக்களங்களும் எங்களை அறிவில்லாதவர்களாகமொழி தெரியாதவர்களாக ஆக்குகின்றன என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நியாயமான அளவு உபயோகம் என்ற ஒரு மொழிச் சட்டத்தைக்கொண்டுவந்து —ஒரு அரைகுறைச் சட்டத்தைக் கொண்டு வந்து அந்த மொழிச் சட்டத்தைக் கூட நடை முறைப்படுத்தாமல் இருக்கின்ற அரசாங்கம் உலகத்திலே வேறு எங்குமே இல்லை. இந்த பௌத்த சிங்கள அரசாங்கத்தைத் தவிர என்று நான் இங்கே கூறிவைக்கவிரும்புகிறேன். எங்கள் விருப்பமில்லாமல் நாங்கள் எதிர்த்துக்கொண்டிருக்க நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழிச் சட்டத்தை—தமிழமொழிப் பிரமாணங்களைச் சிறிதும் நிறைவேற்ருமல்—சிறிதும் அவற்றைப பற்றிப் பொருட்படுததாமல் விரும்பிய தமழ் மொழி உரிமையை அழிக்கின்ற இந்தச் செயல் உலகத்திலே வேறு எந்த அரசாங்கமும் செய்யாத ஒரு செயல் என்பதையுப் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆங்கிலேயருடைய காலத்திலே ஆங்கில மொழி உத்தியோக மொழியாக இருந்த பொழுது தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் பிற்காலத்திலே அவர்கள் உரிய இடம் கொடுத்தார்கள். ஆங்கிலேயர்கள் ஆங்கிலத்தில் மட்டும் ஆண்டார்கள். ஆனல், ஆங்கிலம் படிக்காமல் தமிழும் சிங்களமும் படித்தவர்களுக்கு அந்தநத மொழியிலேயே உததியோகம் பார்க்கும் வாய்ப்பைக் கொடுத்தார்கள். ஆனல், இப்பொழுது சிங்கள ஏகாதிபத்திய அரசாங்கம், கிராம சேவகர்கள், சாதாரண தொழிலாளிகள் உட்பட எல்லோரும் சிங்களம் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தும் பொழுது ஆங்கில ஏகாதிபத்தியததிலும் பார்க்க சிங்கள ஏகாதிபத்தியம் கொடுமையானது என்று சொன்னல் அதனை எவரும் மறுக்க முடியாது.

இங்கே என்னிடத்தில் ஒரு கோவை நிறைய தனிச் சிங்களத்தில் எனக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் இருக்கின்றன. இதற்கு யார் பொறுப்பு? தமிழ் மொழிப் பிரமாணங்களின் படியும், சட்டத்தின் படியும் தமிழில் கடிதம் எழுதினல் தமிழிலே மறுமொழி அனுபபவேண்டுமென்று இருக்கின்றது. ஆனல், தமிழில் மறுமொழி அனுப்படவில்லை. மொழி பெயர்ப்பு அனுப்புவோம என்று கூறினர்கள் அதுவும் கூட அனுப்பப்படவில்லை. இதனல் என்ன நடக்கின்றது? பல தமிழ் மக்களுக்குத் தனிச் சிங்களத்தில் வரும் கடிதங்களை அவற்றிலே என்ன எழுதியிருக்கின்றது என்று அறிய வேறு சிலரிடத்தில் செல்ல வேண்டியிருக்கின்றது.

தமிழ் மொழியில் எழுதும் கடிதஙகளுக்குத் தமிழ் மொழியில் மறுமொழி அனுப்ப வேண்டுமென்று சட்டம் கட்டாயப்படுத்தும் போதுகூட அவ்வாறு அனுப்பாமல் அதனை மொழி பெயர்ப்பாக அனுப்புவோம் என்ருல் அதைவிடத் தமிழ் இனத்தைச் சிறுமைப்படுத்தும் செயல் வேறெதுவுமில்லை. இது தமிழ் மக்களுடைய உள்ளத்தைக் கொதிப்படையச் செய்யும் ஒரு செயல் என்றே கூறுவேன்.

இது எப்படியிருக்கின்றது என்ருல், ஒரு பூனை ஓர் எலியைப் பிடித்துக் குற்றுயிராக்கிவிட்டு அதை கொல்லுவதற்கு முன் அதனுடன் விளையாடிக் கொணடிருப்பதுபோல் நீங்களும் தமிழ் மொழி உரிமைகளைப் பறித்து அதைக் குற்றுயிராக்கிவிட்டு அதனோடு விளையாடிக்கொண்டிருக்கிறீர்கள். சில நேரம் மொழி பெயர்ப்புத் தருவதும், சில நேரம் தாராமல் விடுவதும், சில நேரம் தனிச் சிங்களத்தில் கடிதங்கள் அனுப்புவதுமாகத் தமிழ் இனத்தின் பிறப்புரிமையை, அடிப்படை உரிமையை நீங்கள் சிதைத்துக்கொண்டிருக்கின்றீர்கள்.

தமிழ் மொழிப் பிரமாணங்களுக்கமைய பெயர்ப் பலகைகள், குறிப் பலகைகள், வெளியீடுகள் எல்லாம் தமிழிலே இருக்க வேண்டுமென்று நீங்கள் செய்த சட்டம் கூறுகிறது. பக்கத்திலே இருக்கும் சுகாதார அமைச்சுக்கு வந்து பார்க்கும்படி அல்லது கல்வி அமைச்சுக்கு வந்து பார்க்கும்படி நான் அமைச்சர் அவர்களை என்னுடன் அழைக்கின்றேன். அங்கே உள்ள பெயர்ப் பலகைகள் எல்லாம் தனிச் சிங்களத்திலும், சில ஆங்கிலத்திலும் மட்டும் இருக்கின்றன. ஆனல், சட்டம் என்ன கூறுகிறது? அவை மூன்று மொழிகளிலும் இருக்க வேண்டுமென்று கூறுகின்றது. இதனை எத்தனையோ முறை எடுத்துக்காட்டியும் ஒன்றும் நடைபெறவில்லை. இச்சட்டம் ஒரு சாட்டுக்குத்தான் இருக்கின்றது.

எங்கு பார்த்தாலும் தமிழ் உரிமை மறுக்கப் படுகின்ற காட்சியைத்தான் நாங்கள் காண்கின்றோம். எனவே, தாம் தமிழராக தன்மானம் உள்ள மனிதராக பிறப்பு உரிமை பெற்ற மக்களாக சுதந்திரமாக வாழவேண்டுமென்ருல் எங்களை நாங்களே ஆளவேண்டும், எங்களுடைய மொழிக்கு நாங்களே உரிமை கொடுக்க வேண்டும் என்கிற முடிவுக்கே நாங்கள் எல்லோரும் வந்துவிட்டோம். தமிழ் மக்களுடைய உணர்ச்சிகளை, தமிழ் மக்களுடைய அபிலாசைகளை, தமிழ் மக்களுடைய எண்ணங்களை சிங்கள அரசாங்கம்சிறிதும்பொருட்படுத்தவில்லை.

சில தரகர்களை — கைப்பொம்மைகளை — காட்டிக் கொடுக்கும் கைக்கூலிப் படைகளை —தமிழரிடையே உருவாக்கி தமிழர்களை வசப்படுத்தவோ ஆளவோ முடியாது. எனவேதான் இந்த நாட்டிலே நாம் நல்ல முறையிலே வாழவேண்டுமென்ருல் நாங்கள் எங்களுக்கென ஒரு சொந்த ஆட்சியை உண்டாக்கவேண்டிய நிலைமை உருவாகிவிட்டது. நாங்கள் சென்ற பல ஆண்டுகளாக தமிழ் மொழிக்கு உரிமை கேட்டோம். நாங்கள் எங்களுக்கு ஒரு இணைப்பாட்சியைக்கேட்டோம். ஆனல், இவற்ருல் எங்கள் காலம் வீணுகியதே தவிர நாங்கள் கேட்ட எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. இன்று இல்லாவிட்டாலும் நாளைக்காவது இலங்கையில் ஒரு தமிழ் ஈழம் உருவாகும் என்பதை நான் இங்கு கூறி வைக்கவிரும்புகிறேன்.

இன்னுமொரு பெரிய கொடுமையும் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இழைக்கப்படுகின்றது சுதந்திரம் வந்த பின்னர் ஆங்கில மொழி மூலம் அரசாங்கசேவையில்சேர்ந்த சிங்கள உத்தியோகத்தர்களுக்கு சிங்களத்தில் பரீட்சை எழுத அனுமதிகொடுக்கப்பட்டது. தெரிவுப்பரீட்

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு வேட்டு!

# மட்டுநகரில் நடைபெறும் சமூகசீர்திருத்தத் திருமணம்!

## தமிழர் கூட்டணித் தலைவர்கள் வாழ்த்துரை வழங்குகின்றனர்!

சாதிவேறுபாடுகளையும், மதவேறுபாடுகளையும், பிரதேசவேறுபாடுகளையும் ஊதித்தள்ளி தமிழ் சமுதாயத்தை ஒன்றிணைக்கும் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட சாதியொழிப்பு சமூக சீர்திருத்த திருமணமொன்று தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களான இரு பழம் பெரும் குடும்பங்களுக்கிடையே நாளை (திங்கட்கிழமை) காலை மட்டுநகரில் நடைபெறுகிறது!

சாதி, மத, நிலவேறுபாடுகளை ஒழித்துக்கட்டி தமிழ் சமுதாயத்தை ஒன்றிணைப்பதற்குக் கலப்புத் திருமணங்களே ஒரே வழியென்ற தத்துவத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு பெரும் நிகழ்ச்சியாக இத் திருமணம் அமைகிறது. தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா, பெரியார் ஈ. வெ. ரா போன்ற சுயமரியாதை வீரர்கள் தொடக்கி வைத்த சமூக சீர்திருத்த இயக்கம் ஈழத் தமிழகத்திலும் பரவுவதற்கு இந் நிகழ்ச்சி ஒரு கால்கோளாக அமையும் என்றும் நம்பப்படுகிறது.

தமிழரசுக்கட்சியின் தீவிர ஆதரவாளர்களான பழம் பெரும் குடும்பங்கள் இரண்டு இத்துணிகரமான சாதனையில் இறங்கி சமூக சீர்திருத்தத்துக்கு வழி கோலியுள்ளன. தமிழரசுக் கட்சியின் உதவிச்செயலாளர்களில் ஒருவரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவருமான திரு. வ. பாலசிங்கமும், தமிழரசுக்கட்சியின் நிர்வாக சபை உறுப்பினரும் முன்னாள் யாழ் மாநகர துணை மேயருமான திரு. நா. த. செல்லத்துரையுமே துணிகரமாக முன் வந்து சாதியை முறியடித்திட தங்கள் குடும்பங்களுக்கிடையில் கலப்புத் திருமணத்தை முன்னின்று நடத்துகிறார்கள் இவர்களது துணிகரமான முன் மாதிரியை தமிழ் சமுதாயம் முழுவதும் பாராட்டுகிறது; வாழ்த்துகிறது.

மணமகன் செல்வன் இரத்தினசிங்கம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்; சைவ சமயத்தவர்; திரு. செல்லத்துரையின் மூத்த புதல்வர். மணமகள் செல்வி எலிசபெத் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்; கிறிஸ்தவமதத்தவர்; திரு. பாலசிங்கத்தின் மூத்த புதல்வி.

மணமகன், மணமகள்— இருவருமே இன்றைய சமூக அமைப்பின்படி வெவ்வேறு சாதியைச் சேர்ந்தவர்கள்!

இச்சமூகசீர்திருத்த—சாதியொழிப்புத் திருமணத்தின் மூலம், தமிழ் சமுதாயத்தில் புதிய விழிப்பு ஏற்படும் என்று நம்புகிறோம்—சாதி, மத, நிலவேறுபாடுகள் முறிந்து தமிழ் சமுதாயம் ஒன்றிணைவதற்கு இத்திருமணம் ஒரு வழிகாட்டியாக அமைகிறது!

இத்திருமணத்தில் தமிழர் கூட்டணித் தலைவர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்திருமணம் போலக் கலந்துகொண்டு மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கவிருக்கிறார்கள்.

புதிய மணமக்களுக்கும்—இச் சீர்திருத்த திருமணத்தை முன்னின்று நடத்திவைக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் சுதந்திரனும், அதன் வாசகப் பெருமக்களும் தங்கள் வாழ்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்!

# தமிழ்ஈழ விடுதலை முரசொலிக்க

## உருவாகிறது இஸ்லாமியப் பேரவை!

### 31.1.76-ல் கல்முனையில் அமைப்புக் கூட்டம்!

தமிழ் ஈழ விடுதலை முழக்கத்துக்குப் பக்கபலம் சேர்க்கும் புதிய அமைப்பொன்று எதிர்வரும் 31-1-76 சனிக்கிழமை கல்முனையில் உருவாகிறது. 'அகில இலங்கை இஸ்லாமியர் இணைப்புப் பேரவை' என்ற பெயரில் அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கும் இந்தப் புதிய அமைப்பு, 'தமிழ் ஈழம்' சம்பந்தமாக இஸ்லாமியத் தமிழர்களிடையே பிரசாரம் செய்வதுடன், சமய வேறுபாடுகளின்றி தமிழ் பேசும் மக்களை ஒன்று சேர்ப்பதற்கும் பாடுபடவிருக்கிறது.

தமிழர் கூட்டணியின் துணையமைப்பாக இயங்கிய, தமிழ் ஈழ விடுதலை இயக்கத்துக்கு வேகம் சேர்க்கவிருக்கும் இந்தப்புதிய அமைப்பு, 31-1-76 சனி பிற்பகல் 3 மணிக்கு கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் மைதானத்தில் நடைபெறவிருக்கும் தமிழர் கூட்டணியின் மாபெரும் பொதுக்கூட்டத்தில் வைத்து அங்குரார்ப்பணம் செய்யப்படும். இக்கூட்டத்தில் தமிழர் கூட்டணித் தலைவர்கள் பிரமுகர்கள் அனைவரும் உரையாற்றவிருக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு டாக்டர் ஆ. உதுமாலெவ்வை தலைமை தாங்குவார். கூட்டத்தில் இஸ்லாமிய இளந் தலைவர்கள் மன்னார் கையூம் எருக்கலம்பிட்டி கபூர், கல்முனை ஆதம், மருதூர் வாணன் ஆகியோரும் உரையாற்றுவர்.

இக்கூட்டம், இஸ்லாமிய இந்து ஒற்றுமைக்கு பலமான அத்திவாரமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.4.76-ல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பஸ்தியாம்பிள்ளைக்கு கட்டளை!

தம்மைத் தாக்கியதாக சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் இந்திரன் பஸ்தியாம்பிள்ளைக்கு எதிராக பீட்டர் பொன்கலன் தொடர்ந்திருந்த வழக்கு 22.1 76 வியாழக்கிழமை கொழும்பு மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட போது, திரு. பஸ்தியாம்பிள்ளை அங்கு சமூகம் கொடுக்காததினால், அவர் 2-4-76ல் நீதிமன்றத்துக்கு வரவேண்டுமென்று நீதிமன்றம் அவருக்கு உத்தரவு அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கில் பீட்டர் பொன்கலனுக்காக சட்டத்தரணி சுமந்திரனின் அனுசரணையுடன் திருவாளர்கள் எம். திருச்செல்வம் கியூ. சி. எம். சிவசிதம்பரம் சட்டத்தரணி, நீலகண்டன் சட்டத்தரணி ஆகியோர் ஆஜரானார்கள்.

## புத்தளத்தில் ஈழவேந்தன்

எதிர்வரும் 24-1-76 பிற்பகல 4 மணிக்கு புத்தளம் தமிழ்ப்பேசும் இளைஞர்மன்றத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள கருத்தரங்கில் செஞ்சொற் கொண்டல் திரு. ஈழவேந்தன் "தமிழ் பேசும் இனத்தின் இன்றைய நிலை" என்ற பொருள் பற்றிக் கருத்துரை வழங்குவார். இக்கருத்தரங்கில் திரு. சோமஸ்கந்தா(உடப்பு) உட்படப் பலர் கலந்து கொள்வர்.

### சிங்கள ஏகாதிபத்தி...

—4-ம் பக்கத் தொடர்

சைகளுக்கு சிங்கள உத்தியோகத்தர்கள் அவர்கள் ஆங்கில மொழி மூலம் சேர்ந்திருந்தாலும் சிங்களத்தில் பரீட்சை எழுதஅவர்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டது.

ஆனல் ஆங்கிலம் மூலம் சேர்ந்த தமிழ் உத்தியோகத்தர்களுக்கு தமிழில்பரீட்சை எழுதும் இந்த உரிமை கொடுக்கப்படவில்லை. இதனால் நான் சொல்லுகிறேன். சுதந்திரம் வந்ததால் தமிழ் மக்களுக்கு எந்த விதமான நன்மையும் கிடைக்கவில்லை. உண்மையில் சுதந்திரம் வந்தபின் பழைய சிங்கள உத்தியோகத்தர்கள் பதவி உயர்வுகளுக்கு சிங்களத்தில் பரீட்சை எழுதும் உரிமையைப்பெற்றார்கள். ஆனல் பழைய தமிழ்உத்தியோகத்தர்கள் தமிழில் பரீட்சையை எழுதும் உரிமையைப் பெறவில்லை. ஆகவே இலங்கை பெற்ற சுதந்திரம் சிங்கள மக்களுக்குச் சுதந்திரமாகவும் தமிழ் மக்களுக்குப் பாதகமாகவும் உள்ளது. இஃது ஒரு பாரபட்சமான நடவடிக்கை என்பதைச் சிறப்பாகக் காட்டுகின்றது. (10-12-75ல் ஆற்றிய உரை)

## "தமிழ் ஈழத்தின் விடுதலைக்கு கை...

—1-ம பக்கத் தொடர்

சூட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.

ஆங்கிலத்தில் அளிக்கப்பட்ட அந்த மனுவின் தமிழாக்கம் வருமாறு:—

"பங்களாதேஷில், பாக்கிஸ்தானியர் நடத்திய கொலைவெறி—கற்பழிப்பு கொள்ளை ஆகிய கொடுமைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் நமது நாட்டில் அகதிகளாக தஞ்சம் புகுந்த காரணத்தால் நாம் பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளித்தோம். மனிதாபிமான உணர்வோடு, சிறுபான்மையினருக்காகத் தாங்களும், நமது இராணுவமும் படை நடத்தி பங்களாதேஷை வென்று, வென்ற நாட்டினை — விடுதலை வீரர்களுக்கு — பங்களாதேஷ் மக்களுக்கே அளித்துப் பெருமைப்பட்டோம. அதே போன்று உலகில் பல்வேறு நாடுகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக — சிறுபான்மையினருக்காக தாங்களும் நமது அரசும் ஆதரவாக வாதாடி வருவதை உலகறியும்.

"இந்த நிலையில் நமது அண்டை நாடான இலங்கையில், பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரான இலங்கைத் தமிழர்கள்—தமிழ் ஈழம் என்கின்ற பெயரில் தனிநாடு கேட்டுப் போராடி வருகின்றார்கள் என்பதினைத் தாங்கள் அறிவீர்கள்.

"அப்படி விடுதலைக்காக இலங்கையில் போராடி வரும் சிறுபான்மையினரான தமிழர் பெருங்குடி மக்களை — அவர் தம் விடுதலை உணர்வுகளை அடக்குமுறைகள் மூலம் அடக்கி விடலாமென இலங்கை அரசு கடும் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. குறிப்பாக பங்களாதேஷ் விடுதலைப் போராட்டக் காலத்தில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய மிலேச்சத்தனம் போன்ற மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை மிஞ்சிடும் வகையில், தமிழ ஈழப் பகுதிகளில் இலங்கை இராணுவம் செயல்பட்டு வருகிறது.

அண்ணல் காந்தியின் அஹிம்சாவழியில், விடுதலைக்காகப் போராடும் இலங்கைத் தமிழர்கள் இதன் காரணமாக அடைந்துவரும் துன்பங்கள் தொடர்வதால் அங்குள்ள தமிழர்கள் நமது நாட்டிற்கு அகதிகளாக—அநாதைகளாக எதிர் காலத்தில் வரக்கூடும், அதனல் நமது நாட்டிற்கு மீண்டுமோர் பொருளாதார நெருக்கடி நிச்சயம் வரலாம்—வரும்!

"எனவே நமது நாட்டின் நன்மையைக் கருதியும், இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களை இலங்கைக் கொடுங்கோலாட்சியின் கொடுமையிலிருந்து காப்பாற்றவும், நமது அரசு தாமதமின்றி இதில் தலையிட்டு நடவடிக்கையெடுத்து, தமிழ் ஈழப் பகுதிகளை சிங்கள ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விடுவித்து தமிழ் ஈழ விடுதலைக்குப் போரிடுவோரிடம் அதை ஒப்படைத்து, தங்களின் பெரும் புகழை மேலும், நிலைபெறச் செய்யவேண்டுமென்று வேண்டுகிறோம்."

### ஈழத்தமிழர்களுக் ...

—1-ம் பக்கத் தொடர்

கப்படாத தமிழ் அரசியல் கட்சியொன்றின் தலைவர், தற்போது லண்டனிலிருந்து கொண்டு தமிழர் கூட்டணிக்கு எதிரான பிரசாரத்தை நடத்தி வருவதாக இலண்டனிலிருந்து வந்த செய்தியொன்று கூறுகிறது. ஈழத்தில் ஒற்றுமைப்பட்டு ஒரே கொடியின் கீழ் இணைந்து தமிழர் கூட்டணியாகி — இயங்கிவரும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவர்களைப்பற்றி, இந்த விரக்தியடைந்த அரசியல் வாதி தாறுமாருக இலண்டனில் பிரசாரம் செய்வதைக் கேட்டு, இலண்டனிலுள்ள தமிழர்கள் இந்த அரசியல் வாதியின் மீது தமது வெறுப்பையும் ஆத்திரத்தையும் கொட்டியதாகத்தெரியவருகிறது.

ஈழத் தமிழன் ஒன்றுபட்டு விட்டான்; இந்த ஒற்றுமைக்கு ஊறுதேடும் முயற்சியை எவன் செய்தாலும் அவன் துரோகியாகவே கருதப்படுவான் என்று இவர்கள் குறித்த அரசியல் வாதியிடம் முகத்திலறைந்தது [illegible]

### திருக்குறள்—உரையுடன்

500 மில்க்வைற் நில சோப் அல்லது 50 பார் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி புத்தகம் ஒன்றைப்பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத்தொழிலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தைந்தாண்டு காலப்பணிக்கு ஈழவேந்தனுக்கு பாராட்டு!

தமிழ் ஏந்தல் ஈழவேந்தனின் கால் நூற்றாண்டு தமிழ் சைவப் பணியைப் பாராட்டுவதற்காக, அவரின் ஊராகிய கொழும்புத்துறையில் தைத் திருநாளில் (15-1-1976)ல் மாலை 5 மணியளவில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் ஒரு பாராட்டு விழா பாங்கோடு நடைபெற்றது.

உணர்ச்சிப் பெருக்கோடு நடைபெற்ற இவ்விழாவில் ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் ஒன்று கூடி ஈழவேந்தனிடம் தமக்கிருந்த பற்றையும் பாசத்தையும் காட்டிய தன்மை கண்கொளாத காட்சியாக அமைந்திருந்ததோடு ஈழவேந்தனின் தமிழ்ப்பணியும் சமயப்பணியும் எவ்வளவுதூரம் பரவியிருக்கிறதென்பதையும் எடுத்துக்காட்டியது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கமும் அவரது துணைவியாரும் சிந்தனைச் சிற்பி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பா.உ. பேராசிரியர் நேசையா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கொழும்புத்துறையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்த இவ்விழாவில் சாதி மத உணர்விறகு அப்பாற்பட்ட நிலையில் இன உணர்வும் தமிழ் மக்களிடையே தலைதூக்கியிருக்கிறதென்பதை எடுத்துக்காட்டும் முறையில் கத்தோலிக்கப் பெருங்குடி மக்கள் குறிப்பாக கத்தோலிக்க குருயார்களும், கத்தோலிக்க சகோதரிகளும் (Sisters) பெருந்தொகையாகக் கலந்துகொண்டு விழாவிற்குத் தனிச் சிறப்புத் தந்த பண்பு இங்கு குறிப்பிடத்தக்கது.

கொழும்புத்துறை மணியம் சகோதரர்களின் மங்கள இசையுடன் தொடங்கிய இவ்விழாவிற்கு திரு. க. இராஜசிங்கம் வரவேற்புரை நிகழ்த்த, கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை முந்நாள் முதல்வர் திரு. சி. விசுவலிங்கம் தலைமை தாங்கினார். அவர்கள் தலைமையுரையில் ஈழவேந்தனின் பல்துறைப் பணியைப் பாராட்டிய அவர் ஈழவேந்தனின் 'தமிழ் மண்காப்போம் தாயகம் மீட்போம்' என்ற நூலின் தனிச் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறி இந்நூலின் வாயிலாக இவர் ஒரு தீர்க்கதரிசியாக விளங்குகிறார் என்று குறிப்பிட்டார். தன் தலைமையுரையின் இறுதியில் 'தாசபோதத்தில்' சிவாஜிக்கு இராமதாச அழகன் கூறிய பின்வரும் அழகனை எடுத்துக் கூறும்போது மக்கள் உணர்ச்சியில் ஆழ்ந்தனர்.

"தெளிவுறக் கேட்பாய்
திண் திறல் வீர
ஊழ்வலியாலே
உலைந்த நாமுய்ய
தோள்வலிவேண்டும்
வாள்வலிவேண்டும்

"அகத்திய முனிவன்
தோற்றம் அகத்துறை
அறிவின் ஏற்றம்
இசுத்துள மனிதர்
போற்றும் இனிப்புள
மொழியின் ஆற்றல்
புகத்தகு நெறியிநூற்றுய்ப்
பொலிந்திடும் ஈழவேந்தன்
மகத்துவம் மதித்து
வாழ்த்த வாணியே
வருவாயம்மா"

என்று தொடங்கி ஈழவேந்தன் மீது அரியாலையூர் கவிஞர் வே. ஐயாத்துரை அவர்கள் நீண்ட தோர் கத்திலும் நறுந்தமிழ் மணம் வீசுகிற தென்பதை அதில் வெளிவந்த வாழ்த்துரைகள் கட்டுரைகள், கவிதைகள் ஆகியவற்றில் இருந்துமேற்கோள் காட்டி விளக்கினார். மலரில் டாக்டர் சாலை இளந்திரையன் குறிப்பிடுவது போல் ஈழவேந்தன் ஒரு தனித் தமிழ்த்தொண்டன் மட்டுமல்ல சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் குறிப்பிடுவது போல் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் என்று குறிப்பிட்டபோது கூட்டத்தில் பெரும் கையொலி எழும்பியது.

சொல்லில் வல்லவர், சொல்வதை எழுத்தில் ஏற்றம் பெற வடிப்பதிலும் வல்லவர், இவை அனைத்திற்கும் மேலாக சொல்வதைச் செயலிற் காட்டுகின்ற செம்மல் இவர். எதிர்ப்புக்கள் பலவற்றிற்கிடையில் தனித்து நின்று போராடி வெற்றி கண்டவர் இவர். தன் மதத்திலே தனிப்பற்று மிக்க இவர் கத்தோலிக்க மக்களின் மனத்தையும் மிக்க கவர்ந்தவராய் விளங்குகிறார் ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழாவின்போது அம்மலருக்கு அவர் நிகழ்த்திய திறன் ஆய்வு என்றும் நினைவுகொள்ளத் தக்கது. இங்கு திரண்டிருக்கும் தமிழ்க் கத்தோலிக்க மக்கள் அவரின் அன்பினால் ஆட்கொள்ளப்பட்டவர்களேயாகும்.

> ஈழவேந்தனின் பாராட்டு விழாவில்---
>
> தமிழன் தலையெடுக்க வேண்டுமெனின் தமிழனுக்கு தன்மீது நம்பிக்கை வேண்டும் என்கிறார் ஈழவேந்தன்.
>
> செஞ்சொல் படைத்த ஈழவேந்தனுக்கு 'செஞ்சொற் கொண்டல்' என்ற பட்டம் அளிப்பதில் பெருமைப்படுகிறேன் என்கிறார் நல்லூர் திருஞானசம்பந்த ஆதீன குரு மகா சந்நிதானம் சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகள்.
>
> ஈழவேந்தனின் புகழ் கடல் கடந்த நாடுகளிலும் பரவியுள்ளது. இது நான் கண்டு கேட்ட உண்மை என்கிறார் திருவாசகக் கொண்டல் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.
>
> எதிர்ப்பைக் கண்டு அஞ்சாது எதிரிகள் மத்தியில் செயலாற்றுபவர் ஈழவேந்தன், அவர் சொல்லுவதை செயலில் காட்டும் செம்மல் என்கிறார் வண. தந்தை செல்வரத்தினம் அவர்கள்.
>
> ஈழவேந்தனின் பொன்னான பணிக்கு பொன்னாடைபோர்ப்பதில் பெருமையடைகிறேன் என்கிறார் மில்க்வைற் கனகராயர்.

போர் முரசார்ந்ததும்
புயங்கள் விம்ம
வீரப்படைகள்
விடுதலை முழங்க
சிங்கம் போல
தீயிடைப் பட்ட
தங்கம் போலத்
தியாகிகள் வேண்டும்
திறமைவேண்டும்,
தீமை தீரவே
அறச்சமர் புரியும்
ஆற்றல் வேண்டும்
அர்ச்சுனன் வீமன்
ஆற்றல் வேண்டும்
திருத்தரு வீரதீரர்
வேண்டும்"

இத்தலைமையுரையையடுத்து செங்கதிர்ச் செல்வர் கல்விப் பணி மாணவிகள் தமிழ்த் தாய் வாழ்த்துப்பாட வாழ்த்துப் பாவினை சுவைபடப் பாடினார்.

பின்பு வித்துவான் ச. சி. ஞானப்பிரகாசம், திரு. மா. அமிர்தநாயகம், திரு. இராஜ இராஜேஸ்வரன், தங்கராசா, திரு. சோ. யோகேசுவரன் ஆகியோர் தத்தம் நோக்கில் இருந்து ஈழவேந்தனின் பல்துறைப் பணியை சுவைப்பட மொழிந்தனர்.

விழாவில் ஈழவேந்தனுக்கு வாழ்த்துரை வழங்கிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம் சுவாமிநாத தம்பிரான் அவர்கள் தான் சயமத்துறையில் தமிழுக்குப் பணியாற்றிய போதும், ஈழவேந்தன் அரசியற்துறையில் தமிழுக்குப் பணியாற்றிய போதும் எம் இருவரையும் இணைக்கின்ற உணர்ச்சி இன்பத் தமிழ் உணர்ச்சி என்று கூறிய அவர் மேலும் கூறுகையில், தமிழ் ஞானசம்பந்தரிடம் எம் இருவருக்கும் தனி ஈபாடு உண்டென்று மொழிந்தார். தன் வாழ்த்துரையின் இறுதியில் சோர்விலாத சொல்வளம் படைத்த ஈழவேந்தனுக்கு "செஞ்சொற் கொண்டல்" என்ற சிறப்புப் பட்டத்தை தன் ஆதீனத்தின் சார்பில் அளிப்பதில் பெருமிதமும் பேருவகையும் எய்துவதாகக் கூறினார்.

இதனையடுத்து ஈழவேந்தன் பாராட்டு விழா மலரினை வெளியிட்டு உரை நிகழ்த்திய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மலரின் ஒவ்வொரு பக்

இந்நிகழ்ச்சியை அடுத்து மில்க்வைற் அதிபர், பாரி வள்ளல் எனப்பெயர் எடுத்த திரு. கனகராயர் அவர்கள் திரு. ஈழவேந்தனின் பொன்னானபணிக்கு இதோ நான் பொன்னாடை போர்க்கிறேன் என்று கூறி பொன்னாடை போர்த்து விலைமதித்தற்கரிய நூல்களைப் பரிசிலாக வழங்கியபோது மக்கள் மெய்மறந்து நீண்ட நேரம் கையொலி எழுப்பினர்.

இதனையடுத்து ஈழவேந்தனின் சைவநோக்கு" எனும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்திய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஈழவேந்தன் படைத்த "நான் கண்ட நம்பியாரூரன்" 'பாவைத் தமிழ்" "பேராற்றல் வழிபாடு" போன்ற நூல்களில் காணப்படும் ஆழமான ஆய்வுணர்வையும், சொல்லாட்சியையும், பொருட்பொலிவையும் சுவைபட மொழிந்தார். தன் பேச்சின் இறுதியில் "இன்பத் தமிழால் இறைவனைப்பாடி அன்பைப் பெருக்குதல்" ஈழவேந்தனின் தலையாய சைவநோக்கு என்பதை ஏதுக்கள்கொண்டு எடுத்து இயம்பினார். தன் உரையில் இறுதியில் ஈழவேந்தனின் புகழ் கடல் கடந்த நாடுகளிலும் பரவியுள்ளதை மலேசியா, சிங்கப்பூர், தமிழகம் ஆகிய நாடுகளில் இவரைப் பற்றிப் பலர் ஆவலோடு விசாரித்ததில் இருந்து அறிகிறேன் என்றார். இவரையடுத்து சிந்தை கவர சிறப்புரை நிகழ்த்திய வணக்கத்திற்குரிய செல்வரத்தினம் அடிகள் ஈழவேந்தன் அவர்கள்

இறுதியில் பதில் உரை நிகழ்த்திய ஈழவேந்தன் அவர்கள் தமிழன் இன்று இந்நிலைக்கு தாழ்ந்ததற்கு பிற இனத்தவர்களின் தீய செயல்களுக்கு மேலாக, தமிழன் தன்னைத் தாழ்த்தியதினாலும், தமிழனுக்கு தன் மீது நம்பிக்கையின்மையுமே இவ்வீழ்ச்சிக்குக் காரணம் என்று கூறிய அவர், உலகப் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் ஆனல்ட் ரொயின்பி (Arnald Toynbe) அவர்களின் மேற்கோளை எடுத்துக் காட்டி 21 நாகரிகம் படைத்த நாடுகளில் 19 நாடுகளின் வீழ்ச்சி பிறநாடுகளின் படையெடுப்பினால் ஏற்படவில்லை மாறாகத் தம் மீது தமக்கு நம்பிக்கையில்லாததினால் வீழ்ச்சியுற்றன என்று கூறிய அவர் உண்டு கொழுத்து இறுதியிலே சாப்பாட்டு மேசையில் சாப்பாடாக — உணவாக மாறும் பன்றியின வாழ்க்கைத் தத்துவத்தை தமிழன் ஏற்காது வளமான வாழ்வு காண — தன்மான உணர்வைப்பேணத் தமிழன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்றார். தன்பேச்சின் இறுதியில் தமிழர் வரலாற்றில் சில முக்கிய பகுதிகளை எடுத்துக் காட்டிய ஈழவேந்தன் அவர்கள் அரசியல் வாதிகள் கோழைகளாக இருந்தாலும் உண்மை ஆன்மீகவாதிகள் — சமயவாதிகள் தம் இனத்தை - தம் வெறியை தம் மதத்தை எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இருந்து ஒளித்து ஓட முடியாது. தம் எதிரிகளை எதிர்கொண்டு போரிடும் உறுதி பெற வேண்டும் என்று கூறிய அவர் அடியார் பலரின் வாழ்வில் காணப்பட்ட வீரத்தை -- தமிழ்ப்பற்றை தமிழ் நாட்டுப் பற்றை சுவையோடும் சுடச்சுடவும் எடுத்தக் காட்டினார். தன் பேச்சின் இறுதியில் பூத்த தடா தமிழ ஈழம் பலர்ந்தது தமிழர் வாழ்வு இப்பொங்கற் புது நாளில் என்று முழங்கியபோது விண் அதிர கையொலி எழும்பியது. தன் உரையில் இறுதியில் பாராட்டுக் குழுவினருக்கு நன்றி தெரிவித்த ஈழவேந்தன் இவ்விழாவின் வெற்றிக்கு உயிர் மூச்சாய் விளங்கிய தன் உயிரனைய நண்பர் திரு. பொ. சிவப்பிரகாசத்திற்கு உள்ளம் தொடும் முறையில் கண்களில் நீர் கசிய நன்றி நவின்றார்...

## சுதந்திரன் புதிய சந்தா விபரம்

1976ம் ஆண்டு சனவரியிலிருந்து சுதந்திரன் புதிய சந்தா (உள்ளூர்) விபரம் வருமாறு:-

- ஓர் ஆண்டுக்கு—
  (புதன், ஞாயிறு இதழ்களுக்கு) ரூபா 50-00
- அரையாண்டுக்கு— ரூபா 25-00

சந்தாப்பணத்தை காசோலையாகவோ காசுக் கட்டளையாகவோ (நேரடியாக ரொக்கமாகவோ) செலுத்தலாம்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

நிர்வாகி
சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக விதி
கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றமொழியும் தமிழன் நிலையும் - (4)

# சிங்களத்துக்கு 'SHALL' தமிழுக்கு 'MAY'!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள நீதிமன்ற எல்லைகள் இவைகள்தான் என நிர்ணயிக்கும் அதிகாரம் நீதி அமைச்சரிடம் இல்லாவிட்டாலும், நீதி அமைச்சர் தேசிய அரசுப்பேரவையின் உதவிகொண்டுவடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிங்கள நீதிமன்றங்களை அமைத்துக்கொள்ளமுடியும்.

எந்த நாட்டுச் சரித்திரங்களைப் புரட்டிப் பார்த்தாலும், ஆளுமினம் தமது துரும்பளவு உரிமையிலும் சிறு தாக்கம்ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் அதிகாரத்தை உபயோகித்து பரிகாரம்தேடுவதைக்காணலாம்.

சிங்கள மகனொருவனின் மொழியுரிமை, நீதிமன்ற மொழியுரிமை எவ்விதத்திலும் இலங்கையெங்கனும் பாதிக்கப் படாத அப்பழுக்கற்ற அறுதியிட்ட உரிமையாகவிளங்குகின்றபொழுது நொண்டிச்சாட்டுக் கூறிக் குடைந்தெடுக்க முனைகின்றனர்,

அரசியலமைப்பின் பிரிவு 9 உட்பிரிவு (1)றின் படி "சட்டங்கள் யாவும் சிங்களத்தில் சட்டமாக்கப்படல் வேண்டும். அல்லது இயற்றப் படல்வேண்டும்." தமிழர்கள் பரிதாபத்திற் குரியவர்கள். அதனால், அவ்வண்ணம் சட்டமாக்கப்படும் ஒவ்வொரு சட்டத்தினதும் தமிழ் மொழிபெயர்ப்பொன்றும் இருத்தல் வேண்டும்.

எமக்குக்கிடைத்திருக்கும் உரிமை மொழி பெயர்ப்பினால் எழும் உரிமை; அதற்கப்பால் நாம் மூச்சுவிடப் படாது — இந்த மொழி பெயர்ப்புச் சட்டம் சட்டவாக்க உரிமை பெறமுடியாது. சட்டவாக்க உரிமையை எய்தும் மொழி சிங்களம் மட்டுமே.

அரசியலமைப்பின் படி, நீதியை நிருவகிப்பதற்குச் சட்டத்தினால் தத்துவமளிக்கப் பட்டுள்ள நீதிமன்றங்கள் இன்னுமின்னோரன்ன இவைபோன்ற ஏனைய நிறுவனங்கள்யாவினதும்மொழி இலங்கை எங்கனும் சிங்களமே. இதற்கிணங்க இம்மன்றுகளினது நடவடிக்கைகள், தீர்ப்புக்கள், கட்டளைகள், இன்னுமிவை போன்றவைகள் யாவும் சிங்களத்திலிருத்தல் வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இலங்கையின் இன்றைய அரசியலமைப்பின்படி ஒரு சிறு பகுதிதான்; தனி நாடன்று. ஆகவே, இவ்விரு மாகாணங்களிலும் சிங்களமே நீதிமன்ற மொழியாக இருத்தல் வேண்டும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. 'இருத்தல்வேண்டும்' எனும் சொற்றொடரினால் சிங்களமேயன்றி வேறு மொழியல்ல எனத்திட்டவட்டமாக அறிவுறுத்துகின்றனர்; ஐயம் திரிபுற விளங்கப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்குமாகாணங்களில் "நீதிமன்றமொழியாக சிங்களமே இருத்தல் வேண்டும்" எனும் உரிமைக்குப் பாதகமிலலாது, குந்தக மேற்படாதவாறு தமிழ் மொழியை உபயோகிக்கலாம். நீதிமன்ற சிங்கள மொழியுரிமைக்கு அடங்கியே, எவ்விதத்திலும் இம்மியளவும் சிங்களமொழி உரிமையை மீறாது தமிழ் மொழியை உபயோகிக்கலாம். அவ்வண்ணம் உபயோகிக்கும் உரிமையும் வரையறுக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நீதியை நிருவகிப்பதற்குச் சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள நீதிமன்றங்கள், நியாய சபைகள், ஏனைய நிறுவனங்கள் முன் விண்ணப்பக்காரர்கள் கட்சிக்காரர்கள் என்போரும், அத்தகைய கட்சிக்காரர்களை அல்லது விண்ணப்பகாரர்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கச் சட்டப்படி உரிமைகொண்டவர்களும், தமது வழக்குரைகள், விண்ணப்பங்கள், பிரேரணைகள், மனுக்கள் என்பனவற்றைத் தமிழில் சமர்ப்பிக்கலாம். அத்துடன் அந்நடவடிக்கைகளில் தமிழில் பங்குகொள்ளலாம்.

"தமிழில் சமர்ப்பிக்கலாம், பங்குபற்றலாம்" என்று கூறப்படுகின்றதே தவிர 'தமிழில் சமர்ப்பிக்கப் படல்வேண்டும், பங்குபற்றவேண்டும்' என்று அறுதியிட்டுக் கூறப்படவில்லை. 'சமர்ப்பிக்கலாம்' 'பங்குபற்றலாம்' என்று கூறுவதினால், "நீங்கள் விரும்பினால் செய்யலாம் அல்லது விடலாம்" எனும் பாங்கிலேயே அரசியலமைப்பு அமைந்திருக்கின்றது. முன்னையதில் "சிங்களமாதல் வேண்டும்", "சிங்களத்திலிருத்தல் வேண்டும்" என்று கட்டளையிடப்படுகின்றது.

அத்தோடு, வேறு ஓர் உண்மையும் நிதர்சனமாக மறைமுகிலிடையிலேதோன்றும் மின்னல்போல் காட்சி கொடுக்கின்றது. அரசியலமைப்பின்படி, இலங்கை எங்கனும் நீதிமன்ற மொழி சிங்களமாதல் வேண்டும்; ஆவணங்கள் யாவும் சிங்களத்தில் இருத்தல்வேண்டும். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கட்சிக்காரர்கள் அல்லது அவர்களது சட்டத்தரணிகள் ஆவணங்களைத் தமிழில் சமர்ப்பிக்கலாம், தமிழில் பங்குபற்றலாம்.

முன்னையது பிறப்புரிமை; பின்னையது அவர்களது கருணையிலே, தயவிலே, எமக்கு அளிக்கப்பட்ட ஒரு சிறு சலுகை; அதனை விரும்பினால் உபயோகிக்கலாம் — அப்படி ஆளுகின்ற இனத்தின் கருணையினால் கொடுக்கப்பட்ட சிறு சலுகையை நாம் நடைமுறைப்படுத்தினால், நாம் தமிழிலே கொடுத்த வழக்குரைகள், விண்ணப்பங்கள் பிரேரணைகள், மனுக்கள் யாவும் பதிவேடுகளின் பொருட்டு சிங்களத்தில் மொழிபெயர்த்து வைக்கப் படல்வேண்டும் "வைக்கலாம்" என்று கூறப்படவில்லை, "வைக்கப்படல் வேண்டும்" என்றே கட்டளையிடப்பட்டிருக்கின்றது. ஒன்று கட்டளை; மற்றையது விருப்பத்தின்பேரில், தயவில் செய்வது.

## சட்டத்தரணி செ. வே. விவேகானந்தன்

அரசியலமைப்பினை கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா ஆங்கிலத்தில்தான் வரைந்தார் என்பது சகலரும் அறிந்த உண்மை. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அரசியலமைப்பு சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது. இலங்கையின் அரசகரும மொழி சிங்களமே. அதன்பிரகாரம், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அரசியலமைப்பின் சிங்கள மொழிபெயர்ப்பு சட்டவாக்கம் பெற்றுள்ளது. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அரசியலமைப்பில் "இருத்தல் வேண்டும்" எனும் சொல்லிற்கு "Shall' எனும் ஆங்கில பதத்தையுப், "பற்றலாம்", "கொடுக்கலாம்" எனும் சொற்றொடர்களுக்கு "may" எனும் ஆங்கில பதத்தையும் வினைச்சொற்களாக கையாளப்பட்டுருக்கின்றன. "மே" என்ற பதத்தினை நீக்கி விட்டு "ஷல்" என்ற பதத்தினைக் கையாளப்படவேண்டுமென்று அரசியல் நிருணய சபையில் தமிழ் ாக்கும் நாடாளமன்ற உறுப்பினர்களால் எடுத்து இயம்பப்பட்டது. ஆனால் மெத்தப் படித்தவர்கள் அப்படியிருக்கத்தேவையில்லையென்று தீர்ப்பளித்தனர். அந்தத் தலைசிறந்த நீதிபதிகளின்தீர்ப்பை தமிழ் மக்கள் மறக்கமுடியுமா?

"அத்தீர்ப்பின் பலாபலனை இன்று நாம் கண்முன்னே காண்கின்றோம். என்றாலும் மெத்தப் படித்தவர்களின் ஞானக்கண்கள் திறக்கப்படவில்லை. தாம் பெறுகின்ற சிறு சிபாரிசுப் புழுதி கண்களைத்திறக்க விடவில்லைப்போலும் "மே" என்ற சொல் இருக்காது, "ஷல்" என்ற சொல் இருந்திருந்தால் மாண்பு மிகு அமைச்சர் குடைந்தெடுக்கும் ஆசையைப்பெற்றிருப்பாரா? எழுபத்திரண்டாம் ஆண்டு கூறப்பட்ட உண்மை அன்று அவைக்குதவா வேப்பங்காய்; இன்று எமது உயிர்க்கு உலை வைக்கும் சொல் அன்றோ?

தீர்க்க தரிசனமற்ற ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளினது ஒத்துழைப்பினால், சிங்கள அரசியல் வாதிகள் எம் மீது சவாரி செய்கின்றனர். மெத்தப் படித்த அந்தப் பிரதிநிதிகள் எழுபத்தாறும் ஆண்டிலாகுதல் தமது தவறினை உணர்ந்து தமிழனின் உரிமைகளைப் பெறுவதற்காகுதல் ஒன்று சேர்வார்களா? —வளரும்

## ஆங்கிலம் வேண்டாம் தமிழே வேண்டும்!

### ஜெயக்கொடியின் கோரிக்கை!

அண்மையில்நெல்லியடி, வல்வெட்டித்துறை பொலிசார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் இரு வழக்குகளின் துரட்சிகளை ஆங்கிலத்தில் தாக்கல் செய்தபோது அவ்வழக்கில் எதிரிகள் சார்பில் ஆஜரான உடுப்பிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடி அதற்கு ஆட்சேபம் தெரிவித்தார்.

"இவ்விரு வழக்குகளின் துரட்சிகளையும் பொலிசார் ஆங்கிலத்திலேயே தந்துள்ளனர்; புதிய அறிவிப்பிற்கிணங்க இத்துரட்சிகள் யாவும் தமிழிலேயே அணைக்கப்படவேண்டும்" என்று திரு. ஜெயக்கொடி நீதவானிடம் தெரிவித்தபோது, அதை ஏற்றுக்கொண்ட நீதவான், துரட்சிகளை தமிழில் அணைக்கும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

தமிழர் கூட்டணியின் சட்டத்தரணிகள் ஆங்கிலத்தையே கட்டிக்கொண்டு அழுகின்றனர் என்ற மாற்றாரின் வாதத்தை இந்நிகழ்ச்சி பொடிப் பொடியாக்கி விட்டதல்லவா?

# தியாகிகள் நினைவுச்சின்னம் இருந்த இடம் வணக்கத்துக்குரிய இடமாக மாறட்டும்!

ஒரு பண்பாட்டுநிகழ்ச்சியைத்தானும்சுதந்திரமாக நடத்த வக்கற்ற தமிழ்ப் பேசும் மக்கள் நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர்ப்பலிக்கு ஆளான பதினொருவர் சார்பில் தாம் இரண்டாவது தடவையாக நிறுவிய நினைவுச் சின்னமும் சிதைக்கப்பட்டதைக் கண்டு மனதுக்குள் எரிமலையாகக் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

அதே இடத்தில் திரும்பவும் நினைவச் சின்னம் அமையும் என்ற தமிழர் கூட்டணித் தலைவர்களின் ஆறுதல் வார்த்தை, தமிழ்ப்பேசும் மக்களை ஆறுதல்படுத்துமா வென்பது சந்தேகமே!

மீள நிறுவப்படவுள்ள நினைவுச் சின்னத்துக்கும் திரும்பவும் அதேகதிநேராது என்பதற்கு யாரும் உறுதி தரவியலாது.

ஜனதிபதியின் யாழ்ப்பாண வருகையையும், அரசாங்கப் பதில் தலைவராக மைத்திரிப்பால சேனநாயக்காவின் வருகையையும் நினைவுபடுத்தும் சின்னங்கள் காவலர்களது கண்காணிப்பில் சதாகாலத்திலும் இருக்குப்படியாக யாழ் மாநகர சபைமண்டபக்காணியில்கட்டுக்காவலுக்குள் அமைத்து பாதுகாப்பான இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

தம் கையில் ஆட்சி அதிகாரம் இல்லாத தமிழ் மக்களுக்கு நினைவுச் சின்னங்களை அமைக்கத்தானும் அனுமதி மறுக்கப்படுகிறது. அனுமதி பெறுது அவர்கள் தரமாகவே பொதுவிடங்களில் அமைக்கும் நினைவுச் சின்னங்களுக்கும் அரசுபாதுகாப்பளிப்பது கிடையாது. மாறாக வேலியே பயிரை மேயும் கதை தொடருகிறது.

இந்நிலையில் நிறுவப்படவுள்ள புதிய நினைவுச் சின்னங்களும் சிதைக்கப்படலாம். ஆகவே நினைவுச்சின்னம் வெளிப்படையாக அவ்விடத்தில் நாட்டப்பட்டாலும், நாட்டப்படாவிட்டாலும் பதினொரு தமிழர் புதைக்கப் புதைக்க வாங்கப்பட்ட அப்பூமியை இனி எக்காலமும் புனித பூமியாகப் போற்றுவோமென தமிழ்ப் பேசும் மக்கள் உறுதியெடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் போகும் ஒவ்வொருவரும் தாம்போக வேண்டிய பாதை அவ்விடத்துக்குப் போகாததாகவிருந்தாலும், தூரத்தைப் பெரிதுபடுத்தாது அங்கு சென்று மரியாதை செய்வதை வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அரசாங்கத் தடைகள், கட்டுப்பாடுகள் யாவற்றையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு நான்காவது அனைத்துலகத் தமிழ் மாநாட்டைத் தடல்புடலாக சிறப்புடன் நடத்திய பெருமை தமிழ் மக்களுடையதே! அப்படிப்பட்ட தமிழ் மக்களுக்கு வீரசிங்கம் மண்டபத்தின் முன்னுள்ளகாணியைப்புனிதபூமியாகப் போற்றுவதற்கு நினைவுச் சின்னம் அவசியமல்ல. மலரவிருக்கும் தமிழ் ஈழத்துக்கு அந்தப் புனித பூமியே படிக்கல்லாக அமையட்டும். புறத்தோற்றம் அமைவதிலும்சரி, அமையா விட்டாலும்சரி அந்நிலத்துக்குத் தமிழ்மக்கள்செய்துவரும் மரியாதை தொடர்ந்து நடைபெறட்டும். உண்மையில் செய்யப்படும் மரியாதை அங்கு இன்னும்தீவிரமடைதல்வேண்டும்.

பாடசாலை மாணவர் பாடசாலைகளுக்கும் போகும் போதும் தமது வீடுகளுக்குத் திரும்பும்போதும் அங்கு மரியாதை செய்யச் செல்வார்களாக! அப்படியே தொழிலாளர், உத்தியோகத்தரும் வாரம் ஒரு தடவையாவது அவ்விடத்தில் மரியாதை செய்வதை வழக்கப்படுத்திக்கொள்வது விருப்பத்தக்கது.

கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்டதால் ஒரு நினைவுச் சின்னம் நினைவில் நிரந்தர இடம்பெறமாட்டாது. அந்த இடத்தை நாம் எவ்வளவுக்கு எம் இதயத்தில் இருத்திப் போற்றுகிறோம் என்பதில் தங்கியுள்ளது, அது புனித பூமியாவது.

—திரவியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதத்தில் புதிய சாதனை!

இலங்கையில் இதுவரை எவரும்சாதித்திராத தொடர்ச்சியாக 21 நாள் உண்ணாவிரதமிருந்து சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார் விஞ்ஞானப் பட்டதாரியான திரு. அழகரத்தினம் என்பவர்.

உரும்பிராய் வாசியான திரு. பரம்சோதி தமது இஷ்ட தெய்வமான ஞான வைரவர் கோவில் மண்டபத்திலேயே மேற்படி உண்ணாவிரதத்தையும், தனிநபர் சத்தியாக்கிரகத்தை கடந்த மாதம் 26-12-75ல் ஆரம்பித்து இன்று வரை விடாப்பிடியாக தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறார்.

இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்படாத சாதனையை நிறைவேற்றியிருப்பதால் உரும்பிராய் மக்களின் கவனத்தை திரு. பரம்சோதியின் உண்ணாவிரதம் பெரிதும் கவர்நது வருகிறது. தினமும் பலர் ஞான வைரவர் கோவிலுக்குச் சென்று அவரது குறையை விசாரிக்கத் தலைப்பட்டுள்ளனர். ஆயினும் இலங்கையில் இப்படிப் பட்ட ஒரு சாதனையை முதன்முறையாகத் திரு. பரம்சோதி நிறைவேற்றி இருந்தும் அது பற்றி தினசரிப்பத்திரிகைகள் எதிலும் வெளிவராததைப் பெரும் மர்மமென்றே ஊரவர்கள் பேசிக்கொள்ளுகின்றனர். பொலிசாரும் அதில் சிரத்தை எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

திரு. பரம்சோதியின் உடல் நிலை சற்றுத் தளர்ந்திருந்தபொழுதிலும் மோசமடையவில்லை. எப்படியிருந்த பொழுதிலும் எச்சமயத்திலும் அவர் உடல் நிலை பாதிக்கட்படலாமென்பதால் உரும்பிராய் மக்கள் பரபரப்படைத்துள்ளனர்.

## கொம்மாதுறை அ. தி. மு. க.

முன்னைநாள் கல்குடாத் தொகுதித் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பொ. மாணிக்கவாசகர் அவர்களின் திடீர் மறைவு கல்குடா வாழ்தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி, இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகுமென கொம்மாதுறை அண்ணா தி. மு. கழகக் கிளை அமைப்பாளர் செல்வன் ஆ.ச. திருமால் கொம்மாதுறை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கிளை சார்பில் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

## நீலாவணன் நினைவு கவிதைப் போட்டி

நீலாவணன நினைவுக் கவிதைப்போட்டி சம்பந்தமாக விண்ணப்பப்படிவம் கோரி ஏராளமான கடிதங்கள் கழகத்திற்கு வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. முடிவு திகதி தை 31. எனவே விண்ணப்பப் படிவம் கோருவோர் உடன் கழகத்துடன் தொடர்பு கொள்க. இன்னும் சிறிதளவே விண்ணப்பப் படிவங்கள் இருப்பதால தாமதியாமல் உடன் தபால் தலையுடன் பின்வரும் முகவரிக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளவும். கல்முனை முத்தமிழ் கழகம், 81, மட்டு நகர் வீதி, கல்முனை.

## பண்டிதையின் நூல் வெளியீடு

சிவத் தமிழ்ச் செல்வி, திருவாசகக் கொண்டல் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் கந்த புராணச் சொற்பொழிவுகள் திரட்டு நூல் வெளியீட்டு விழா இம்மாதம் 25ந் திகதி மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறுகிறது. அதற்கு முதல் நாள் சனிக்கிழமை, இதே மண்டபத்தில் 'கச்சியப்பர் கவிநயம்' எனும் பொருள் பற்றியும், வெளியீட்டு விழா நடைபெறும் நாளான ஞாயிற்றுக்கிழமை "கந்தபுராண மகிமை" எனும் பொருள்பற்றியும் பணடிதை தங்கம்மா உரையாற்றுகிறார்கள்.

## மறைந்த தலைவருக்கு அனுதாபம்!

தமிழினத்துக்குச்சோதனை ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில், தலைவர் மாணிக்கவாசகர் அவர்களின் மறைவு மிகவும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரின் மறைவுக்குத் தமிழ் இளைஞர் பேரவை வட அலவை கிளையும் அஞ்சலி செலுத்துகிறது.

## தமிழ்இளைஞர்பேரவை அனுதாபம்

"தமிழ்பேசும் மக்கள் தங்கள் நிலமொழி உரிமைக்காக நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கு பற்றிய தோடமையாது, தடுப்புக் காவல்களிலும் இருந்ததன் மூலம் தமிழர்களின் இதயங்களில் அழியா இடம் பெற்றவர் திரு. மாணிக்கவாசகர் அவரது கொள்கைகளை இதயத்திருத்திச் செயற்படுவதே அவருக்கு நாம் செய்யும் பேரஞ்சலியாகும்"

—கல்குடா முன்னாள் எம். பி. திரு. பொ. மாணிக்கவாசகரின் திடீர் மறைவு குறித்து தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் அதன் அமைப்பாளர்களில் ஒருவரும், சட்டக்கல்லூரி மாணவருமான திரு. எஸ். கே. மகேந்திரன் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


6-வது வெற்றி வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு) லிடோ (யாழ்நகர்)

ஜெமினி கணேசன் - பத்மினி
கே. ஆர். விஜயா, ஜெயலலிதா நடித்த-

அன்னை வேளாங்கண்ணி (கலர்)

கிங்ஸ்லி (கொழும்பு) 2வது வெற்றிவாரம்

கல்வியைத் தந்தவன் கடவுள்
அதை! . .
சொல்லிக் கொடுத்தவன்
தூய பொருள் எல்லாம் அள்ளிக் கொடுத்தவன்
அழகோடு மணம பரப்ப அறிவுரையை வழங்குபவன்
ஸ்கூல் மாஸ்டர்!

ஜெமினி கணேசன். சௌகார் ஜானகி. நம்பியார், சோ, ஸ்ரீகாந், தேங்காய் சீனிவாசன் முத்துராமன் நடித்த

ஸ்கூல் மாஸ்டர்

பிளாசா 5வது வாரம்!

ஜெமினி, பத்மினி, ஜெயலலிதா, ரங்கராவ் நடித்த-

ஆதிபராசக்தி (கலர்)

வெலிங்டன் 3-வது வெற்றி வாரம்!
(யாழ்ப்பாணம்)

சிவகுமாரன், லக்ஷமி, எம். என். ராஜம், மனோரமா நடித்த-

கண்மணி ராஜா

5-வது வாரம் செல்லமகால்

அன்றுடம் மனிதனின் வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களிலும்
ஒரு அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது
புதுமைகளும் நடக்கின்றன. ஏன் இறைவனும் எத்தனையோ
பிறவிகள் எடுத்தும் இன்னும் மனிதன் உணர்ந்தானா?

O ஜெமினி O ஜெயலலிதா O முத்துராமன்
O ரங்கராவ் O பத்மினி O சுருளிராஜன்
O எஸ். வி. சுப்பையா O வாணிஸ்ரீ O ராஜஸ்ரீ
O சுந்தரராஜன் O ராகினி O நிர்மலா நடித்த

எல்லா மதத்தினரும் பார்க்கவேண்டிய படம்

ஆதிபராசக்தி
(ஈஸ்ட் மன் கலர்)

இசை கதை வசனம் — டைரக்ஷன் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

கெபிட்டி 3-வது வாரம்

சிவகுமார், தேங்காய், செந்தாமரை, லட்சுமி, எம். என். ராஜம், மனோரமா நடித்த-

கண்மணி ராஜா

ரொக்ஸி

ஜெமினி வாணிஸ்ரீ, சுந்தரராஜன், சரோஜாதேவி, நாகேஷ் நடித்த-

கே. பாலசந்தரின் தாமரை நெஞ்சம்
(புத்தம் புது கொப்பி)

றீகல் மட்டுநகர் 5-வது வாரம்

தினசரி 6, 9-30, சனி-ஞாயிறு 2-30, 6, 9-30
முத்துராமன்—கே. ஆர். விஜயா — ஜெயசித்திரா
சிவகுமார்—சுந்தரராஜன் —நடித்த

தீர்க்கசுமங்கலி


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு—12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976—ம் வருடம் ஜனவரி மாதம் 25-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org